Registered as a News paper in Sri La...    பக்கங்கள்: 06    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஆடு சித்திரை மீ 24 ஆம் உ    திங்கட்கிழமை    (07 - 05 - 1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வால் 1    ஓசை 78

## வல்வத்தையில் ஆயுதங்கள் மீட்பு

(கல்முனை)

வல்வத்தைப் பகுதியில் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து கடந்த புதனன்று பாண்டிருப்பு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் வின்சன்ற் தலைமையில் சென்ற விடுதலைப் புலிகள் அப்பகுதியில்தேடுதல் வேட்டை நடாத்தினர். தேடுதலின்போது பற்றைக்குள் புதைத்து வைத்திருந்த பிஜி 3 கைத்துப்பாக்கி ஒன்று, ஏழு ஏ. கே கள், ருவிஸ் மோட்டர் ஒன்று, ஏழு செல்கள், 3000 ரவைகள் கைப்பற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து மறுநாள் வியாழனன்று கல்முனைக் குடியில் ஒரு ஏ. கே, எஸ் 84 ஒன்று கைப்பற்றப்பட்டதாக அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் ராம் தெரிவித்தார். (48)

# மலையகத்தமிழரை நாடு கடத்துவதற்கு எதிர்ப்பு!

## தொழிற் சங்கங்கள் போர்க் கொடி! மத்திய அரசுடன் தமிழ் நாடு பேசும்!

(கொழும்பு)

மலையகத்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களில் இந்தியக்கடவுச் சீட்டுப் பெற்றவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்றும் இதற்காக தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்ததை எதிர்த்து மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களும் இதர தொழிற்சங்கங்களும் பலத்த எதிர்ப்புத்தெரிவித்துப் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றன.

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. வி. பி. கணேசன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இப்போதுசெயல்படுத்துவது சாத்தியமற்றதென்று சொன்னார்.

இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்றவர்கள் எண்பத்தெட்டாயிரம் பேரென்றும் அவர்களுடன் இன்றுசார்ந்துள்ளவர்களையும் சேர்த்து ஒருலட்சத்து அறுபத்தாறாயிரம் பேருள்ளனரென்றும் இவர்களைக் கட்டாயமாக நாடுகடத்த முடியாதென்றும் திரு. கணேசன் தெரிவித்திருக்கிறார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு இந்தியக்கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டன. இவர்களில் பலர் இந்தியா திரும்பிவிட்டனர்.

இப்பொழுது இந்தியக் கடவுச் சீட்டு வைத்துள்ள மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை கட்டாயமாக நாடு கடத்த வேண்டுமென்ற இலங்கை அரசின் செயலை தொழிற் சங்கங்கள் எதிர்த்து நிற்கின்றன.

### தொண்டமான் காங்கிரஸ் நிலை

மலையகத் தோட்டத் தொழிற்சங்கங்களில் பெரிய சங்கமாக விளங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இப்

## தேனிசைச் செல்லப்பாவிற்கு புலி இலச்சனை மோதிரமும், பொன்னாடையும்

(அம்பாறை)

கல்முனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு பிராந்தியத்தளபதி கருணா புலி இலச்சனை பொறிக்கப்பட்ட மோதிரம் ஒன்றை வழங்கிக் கௌரவித்தார்.

அதேவேளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் தேனிசைச் செல்லப்பாவிற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறைக்கு புதிய நூலகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் நவீன வசதிகளைக் கொண்ட புதிய பொதுசன நூலகம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## தனியார், அரச துறைகளில் வேலை வாய்ப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க, தனியார் துறைகளில் கடந்த வருடம் அதிகமானோர் வேலைக்கு அமர்த்தப்பட்டதாக மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அரசாங்க கூட்டுத்தாபனங்களில் ஆட்சேர்ப்பு கடந்த வருடம் குறைந்திருந்தது எனவும் அரசாங்க திணைக்களங்களில் ஆட்சேர்ப்பு அதிகரித்தது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் வரையும் அரசாங்க திணைக்கள ஊழியர்கள் எண்ணிக்கை பதின்மூன்று லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து இருநூறு

## கல்முனையில் அன்னை பூபதி வீதி

(கல்முனை)

கல்முனையில் புதிதாக அமைக்கப்பட்ட வீதி மட்டக்களப்பு வீதியையும் கிட்டங்கி வீதியையும் இணைக்கும் வீதியாக விளங்குகிறது. இவ்

## கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உணவு முத்திரைகளும், பணமும் தட்டாதெருச் சந்தியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## கல்லுண்டாயில் வழிப் பறிக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கல்லுண்[illegible]ய் வெளியில் கந்தையா பொன்னம்பலம் என்பவரிடமிருந்து ரூபா 15,000 பெறுமதியான வைர மோதிரம் பறிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று இரவு 8.30 மணியளவில் கந்தையாபொன்னம்பலம் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தசமயம் ஆயுதபாணிகளான மூன்று இளைஞர்கள் அவரை வழி மறித்தனர். துப்பாக்கி முனையில் பயங்காட்டி அவர் மோதிரத்தை அபகரித்துக்கொண்டு வயல் வெளியில் கொள்ளையர்கள் மறைந்து விட்டார்களாம். இப்படிச்சம்பவங்கள் பல முறை கல்லுண்டாயில் நடந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

களப்பு வீதியையும் கிட்டங்கி வீதியையும் இணைக்கும் வீதி யாக விளங்குகிறது. இவ் வீதிக்கு அன்னை பூபதி வீதி என்று பெயரிட்டு, அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் கஸ்ற்ரோ திறந்து வைத்தார். (48)

கள ஊழியர்கள் எண்ணிக்கை பதின்மூன்று லட்சத்து, முப் பத்தெட்டாயிரத்து இருநூறு இது 3.9 சதவீத அதிக ரிப்பு

அமைச்சர்கள், திணைக்கள ங்களின் ஊழியர்களின்மொத்த

(6ஆம் பக்கம் பார்க்க)

முப்பத்தைந்து வருடங்களுக்கு சொன்னார்.

ளையும் சேர்த்து ஒருலட்சத்து

ழிற்சங்கங்களில் பெரிய சங்க மாக விளங்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கள் பல முறை கல்லுண் டாயில் நடந்துள்ளமை யும் குறிப்பிடத்தக்கது.

# ஹெலிகொப்ரர் விழுந்து நொறுங்கி 6 பேர் பலி!

(பொலன்னறுவை)

இலங்கை விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர் ஒன்று காலநிலை சீர்கேடு காரணமாக பொலன்னறுவை மாவட்டத்தில் சிகிரியாவுக்குச் சமீபமாகவுள்ள பகுதியில் இங்கிலியாகொட என்ற இடத்தில் விழுந்து நொறுங்கியதில் அதில் பய ணம்செய்த ஆறுபேரும் மாண்டனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கல்லடியிலிருந்து புறப்பட்ட ஹெலிகொப்டர் காலநிலை சீர்கேடு காரணமாக காணாமல் போயிருந்தது, இதனைத் தேடுவதற் குப் புலிகளின் உதவியை விமானப்படையினர் நாடியிருக்கின்றனர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்த ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கிய இடத்தை விமானப்படையைச் சேர்ந்த மூன்று ஹெலிக்கொப்டர்கள் தேடுதல் நடத்திக் கண்டுபிடித்தனர். இதிலி ருந்து ஆறுபேருடைய சடலங்களும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இவ்விபத்தில் பிளைட் லெப்டினன்ட் சி. கே. ஹரியஹமுன, பிளைட் லெப்டி னன்ட் பி. ரி. ஏ. டீ மெல், பிளையிங் ஒப்பியர்களான அருணா பீரிஸ், ரஜீவ், லீடிங் ஏயர் இறாப்ற் மென்களான டி., எஸ். கே. அருணா பெரேரா, ரொணி டீ ரெக்கீ ஆகியோர் இறந்தனர்.

## மட்டக்களப்பு வாகரை

# நடமாடும் செயலகத்தில் திணைக்களங்கள் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை நட மாடும் செயலகத்தில் தேர்தல் திணைக்களத்திற்கு அழைப்பு விடுவிக்கப்பட வில்லை என தெரியவருகிறது

வாக்காளர் இடாப்பு பிரதி கள் பெறுவதற்கும், வாக்கா ளர் இடாப்புகளில் தமது பெ யர்கள் இடம்பெற்றுள்ளதா? என பார்வையிடுவதற்கும் வருகை தந்த பலரும் ஏமாற் றத்துடன் திரும்பியுள்ளனர்.

இச் செயலகத்தில் நிறுத் தல் அளவை திணைக்களம் இடம்பெறாத காரணத்தி னால் தராசுகளுக்கும்.அளவை கரண்டிகளுக்கும் முத்திரை குத்தவந்த வியாபாரிகள் அதி ருப்தியுடன் திரும்பிச் சென்ற னர்.

நடமாடும் செயலகத்தில் தமது மோட்டார் சைக்கிள் கள் பதிவு செய்தல், சாரதி அனுமதிப்பத்திரம் பெறல் போன்றவற்றிற்கு வந்தவர்க ளும் மோட்டார் வாகன திணைக்களம் இல்லாத நிலை யில் ஏமாற்றமடைந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வராத்துப்பளை தும்பளை வீதி திருத்தியமைக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித் துறையிலுள்ள வராத்துப்பளை தும்பளை வீதி நீண்டகாலமாகக் கவனிப் பாரற்றுக் குன்றுகள், குழிக ளுடன் காட்சியளித்துக் கொ ண்டிருக்கின்றது, இவ் வீதி யால் வாகனங்களோ, பாத சாரிகளோ பிரயாணம் செய்ய முடியாத அவலநிலை தோன் றியுள்ளது. இவ்வீதியில் அடிக் கடி பயங்கர விபத்துக்களும் ஏற்படுகின்றன.

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதிக்

(6ஆம் பக்சம் பார்க்க)

# ஆசிரியர் சேவைப் பயிற்சி பின்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி மகாவித்தி யாலயத்தில் (கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில்) 9ஆம் திகதிமுதல் 13ஆம்திகதி வரை நடைபெறவிருந்த க. பொ. த. உயர்தர விஞ்ஞான ஆசிரியர்களுக்கான சேவைப் பயிற்சி வகுப்புக்கள் மறு அறிவித்தல்வரை பின்போடப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தர லிங்கம் இதனைத் தெரிவித் தார்.

இப்பயிற்சி நெறிக்கனா கடி தத்தைப் பெற்ற ஆசிரியர்கள் இங்கு வரத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழ் நாட்டுக்கு புலிகள் வரவேண்டிய தேவையில்லை

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிக ளின் முகாம்கள் எதுவும் தமிழ் நாட்டில் இல்லை என்று தமிழ் நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று செய் தியாளரிடம் கூறினார்.

விடுதலைப்புலிகள் தொடர் பாக செய்தியாளர் பல கேள்விகளை முதலமைச்சரி டம் கேட்டனர்.

விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டுக்கு வரவேண்டிய அவ சியம் ஏதும் இல்லை என்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாசியாவில் முதல்தர வல்லரசு இந்தியா என்பதை முறியடித்தோம்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்களில் நாமடைந்த வெற்றிகள் தென்னாசியப் பிராந்தியத்தின் முதற்தர வல் லரசு இந்தியாதான் என்ற நிலலபோய் அந்த இடத்தை தமிழீழம் பெற்றுக்கொண்டுள் ளது.

ஆயுதரீதியாக நாம் இந்திய இராணுவத்துடன் மோதி வெற்றிகொள்ளும் நிலையை அடைந்துவிட்டாலும் பொரு ளாதாரரீதியிலும்நாம் எமக்கு நிகர் நாமே என்ற நிலை யைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

என விடுதலைப்புலிகள் மக் கள் முன்னணி யாழ் மாவட்ட அமைப்பாளர் இ. ராஜன் அவர்கள் தமிழீழ ஆய்வு நிறு வனத்தால் கோண்டாவிலில் நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்ட தும்பு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை யில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் திரு, ராஜன் குறிப் பிடும்போது தென்னாசியப் பிராந்தியத்தின் ஏக வல்லரசு தமிழீழமே என்ற பெயரை பெறுவதற்கு எமது மக்கள் எல்லோரும் தமது பொரு ள தார வளர்ச்சியில் முழுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ரயில்கள் மோதி நால்வர் மரணம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர வடபகுதியில் சுரங்கப் பாதையில் சென்றுகொண்டி ருந்த இரு ரயில்கள் நேற்று மோதியதால் நான்கு பேர் பலியானார்கள். ஐம்பது பேரு க்குமேல் காயமடைந்தனர்.

# இன்று கடலுக்கு செல்லவேண்டாம்; மீனவர்களுக்கு எச்சரிக்கை!

(கொழும்பு)

வங்காளவிரிகுடாவின்தென் மேற்கு பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக மாறிவருவதாக வானிலை அவதான நிலையம் அறிவித் துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2-30 மணிக்கு யாழ்ப்பாண குடா நாட்டில் இருந்து சுமார் 250 மைல் கிழக்குப்பகுதியில் தாழ முக்கத்தின் மையம் நிலை கொண்டிருந்தது எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

இன்று யாழ்ப்பாணம், மன் னார். கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிக ளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

வடபகுதி கடலில் மீனவர் கள் மீன்பிடிக்கச் செல்லவேண்

(6ஆம் பக்கம் பார்க்க)

# உரிமை, பாதுகாப்புப்பற்றிப் பேச பல்கலை தொழிலாளர் விருப்பம்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழ கத்தில் கடமையாற்றும் தொ ழிலாளர்களின் உரிமை, பாது காப்பு உத்தியோகத்தர் நிய மனம் தொடர்பான பிரச்சி னைகள் பற்றி உரையாட விரும்புவதாகப் பல்கலைக் கழகத் தொழிலாளர்கள் சம் மேளனம் பேராதனைப் பல் கலைக்கழக உபவேந்தரைக் கேட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கும், பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்ற போர்வையில் நிய மனம் வழங்கப்பட்டுள்ளதாக கடந்த ஏப்பிரல் 4ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தரைச் சந்தித்த சம யம் சம்மேளனத் தலைவர் கள் குற்றம் சாட்டினார்கள்

பல்கலைக்கழக வளாகத் தில் மேதினக் கூட்டத்தை

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரசகாணிகளைப் பகிர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை

(வந்தாறுமூலை)

ஏறாவூர் பற்று உதவி அர சாங்க அதிபர்பிரிவின்கீழ்ஜயங் கேணி, மைலம்பாவெளி, சவு வன்கேணி, கரடியனாறு,போ ன்ற இடங்களில் உள்ள அரச காணிகளை நிலஅளவைப் பகு திமூலம் பகிர்ந்து காணி அற் றோர் ஒவ்வொருவருக்கும் இ ருபது பேச்சஸ், வீதமாக கொ டுப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

மற்றும் குடியிருப்புக் காணி கள் 39 ஹெக்டயர் 765 குடும் பங்களுக்கும் பகிர்ந்தளிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

கூடிய விரைவில் இவர்களை காணியில் அமர்த்தி காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப் படவுள்ளது.

இவ்வாறு ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் திரு. க. கனகரட்ணம் ஈழநாதத் துக்கு தெரிவித்தார். (29)

# நீதிமன்றங்களில் விசாரணை துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள நீதி மன்றங் களில் விசாரணைகளை துரி தப்படுத்தி தாமதமின்றி நடத்த நீதி அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

நீதியமைச்சின் இந்த புதிய திட்டப்படி வழக்காளிக்கும் அரசுக்கும் ஏற்படும் செலவு களைக் குறைக்கவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நோறாட் 40 லட்சம் உதவி

(வந்தாறுமூலை)

மட்டக்களப்பு மாவட்டத் தில் நொறாட் நிறுவனம் நாற்பது லட்சம் ரூபாவை சிக்கன கூட்டுறவு சங்கம்மூலம் கடனாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் முதற் கட்டமாக இருபது லட்சம் ரூபா சுயமுய ற்சிக் கடனாக வழங்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட சிக்கன கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் திரு. க. ஜெக

(6-ஆம் பக்கம் பார்க்க)

விரிவிளம்பரம்

விருந்பநோக்கு

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர்விகடன்,யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் - ஆங்கிலம் FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(B.825)

## புராண நாடகம்

புங்குடுதீவு கிழக்கு ஆலடிப் பகுதியில் வாழும் இளைஞர் யுவதிகள் தமிழ்ப் பாரம்பரிய பண்பாடுகளை வளர்க்கும் நோக்குடன் பல புராண நாடகங்களை தயாரித்து மேடையேற்றி வருகிறார்கள்.

தேவாலயா நாடகமன்றம் என்ற பெயரில் கலை கலாச்சார வளர்ச்சிக்கு பெரும் பங்களித்து வரும் இக்கலைஞர்களை பிரபல நாடக ஆசிரியர் பொன் ஐ. சிவசாமி நெறிப்படுத்தி வருகின்றார்.

பிரபல வில்லிசைக்கலைஞர் தேவகாந்தன் மற்றும் இளம் கலைஞர்கள் பிறேம் சுகந்த் பிறேம் றஜீந்த் ஆகியோரின் மேற் பார்வையில் தற்போது மேடையேற்றப்பட்டு வரும் பக்த மார்க்கண்டேயர் எனும் புராண நாடகம் இப்பகுதியெங்கும் பெரும் வரவேற்பை பெற்றுவருகின்றது. (22)

# நாட்டுக்கூத்து தமிழீழத்தின் வழியாகவே தென்னிலங்கைக்குச் சென்றது

(கொழும்புத்துறை)

''இலங்கையில் நாட்டுக்கூத்தானது எமது தமிழீழத்தின் பண்டையத் துறைமுகங்களிலொன்றாகிய மாந்தை மாநகர் வழியாகவே தென்னிலங்கைக்குச் சென்று பாரம்பரிய கலையை செழிமைப்படுத்தின.

இதை கலாநிதி குணதிலகா ஒப்புக் கொள்வதோடு மன்னார் மாவட்டத்தில் எழுந்த ,'மூவிராசாக்கள்'' நாட்டுக்கூத்து ''துன்ரஜ'' என தென்னிலங்கை கரையோரப் பகுதிகளில் ஆடிவருவது எமது பாரம்பரிய கலைக்கு பெருமையளிக்கக் கூடியதான தாகும்''

இவ்வாறு ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களில் ஒருவரான கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட 'வித்துக்கள்' என்ற நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழாவின் போது உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்டவிரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் கூறினார்.

இந்த விழாவுக்கு அருட்திரு எச். ஜெபநேசன் அடிகளார் தலைமை வகித்தார்.

விழாவுக்கு பிரதம அதிதியாக அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் நிர்வாகப் பொறுப்பாளர் கே. லோகநாதன் கலந்து கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கே. நாகேஸ்வரன் பேசுகையில்:- ஒரு துறையை நன்கு தெரிந்தவரே அத்துறைக்கான நூலை எழுத முற்பட வேண்டும் கவிஞர் தேவதாசன் அவர்கள் பலகாலமாக இத்துறையில் ஏற்பட்ட அனுபவமே இப்படி முத்தான வித்துக்கள் என்ற நாட்டுக்கூத்தை எழுத அவருக்கு பேருதவியாகவிருந்தது எனக் கூறினார்.

மற்றும் திரு. எஸ். எஸ். தங்கராஜாவும் ஆய்வுரையில் கலந்து கொண்டார்.

திருமறைக்கலாமன்ற திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ். ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசியுரை வழங்கினார். (24)

# கடத்தல் பொருட்கள்

(சென்னை)

இராமேஸ்வரத்தின் கடலுக்கு அப்பால்கடலில் இரண்டு படகுகளிலிருந்து வீடியோ ஒளிப்பதிவு நாடாக்கசட்டுகள் டெக்குகள்உட்பட ஒருலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு பொருட்களை இந்திய சுங்க அதிகாரிகள் கைப்பற்றினார்கள்.

இந்த இரண்டு படகுகளும் இந்தியக்கடல் எல்லைக்குள் நுழைய முயலுகையில் துரத்திப்பிடித்து பொருட்களைக் கைப்பற்றியதாக சுங்கப்பகுதியினர்தெரிவித்தனர்.

# தென்னங்கன்றுகள் வழங்க தே. அ. சபை நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் தென்னை செய்கையாளர்களுக்கு மைலம்பாவெளி நாற்றுமேடையிலிருந்து தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படும்.

இந் தகவலை தென்னை அபிவிருத்தி சபையின் உதவி பிராந்திய முகாமையாளர் எஸ். சிவச்சந்திரன் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

இந்தியப்படைமுகாம் காரணமாக 1988 - 1989ஆம் ஆண்டுகளில் தென்னை நடுகை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தென்னை செய்கையாளர்களுக்கு கன்றுகள் விநியோகம் இடம்பெறவில்லை.

இவ் வருடம் மாகாணசபையிடமிருந்து 53,000 நாற்றுக்கள் கிடைத்து நடுகை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாதம்முதல் இவை விநியோகம் செய்யப்படும் என்றார். (37)

COMPUTER EDUCATION

யாழ். மாணவர்களின் வசதி கருதி கொழும்பு ICC (Institute foComputer Com -uunications) நிறுவனம் தனது கிளை ஸ்தாபனத்தை இல 102, 3.ஆம் குறுக்குத் தெருவில்(Safty Bus கட்டடத்திற்கு அருகாமை) ஆரம்பித்துள்ளது.

COURSES OFFERED

1) Basic for Beginners;
2) d Base III t - (Data Base Management-Systems) for Accountants & Businessmen
3) Lotus - for Accountants and Sec-retaries and Managers.
4) Auto Cad - for Architects. Surveyers. Draughtman and People who are in the field of Statistics
5) Word Star - for Future Typists, Secre-taries, Journalists and Reporters.
6) Word Perfect
7) Diploma l and 2 - for those who Venture in Computer field as their Professinoal Carried.

Diploma 1 Basic / d Base / Lotus / Word Star
Diploma 2 d Base / Lotas.

அதிக பயிற்சி நேரத்துடன் சிறந்த, தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களின் நேரடி கவனிப்புடன் Computer கல்வி கற்பிக்கப்படும் ஒரே ஸ்தாபனம் I C C.

பயிற்சி முடிவில் மாணவர்களின் திறமைக் கேற்ப கொழும்பு I C C நிறுவனத்தின் அனுசரணையுடன் சான்றிதழ்கள் வழங்கப்படும்

# ஓமந்தையில் தேனிசைநிகழ்ச்சி

(வவுனியா)

தேனிசை செல்லாப்பாவின் இசை நிகழ்ச்சி எதிர்வரும் பதினாறாம் திகதி ஓமந்தை மகா வித்தியாலய வெளியில் நடைபெறவுள்ளது.

செல்லப்பாவுடன் பாடகி சொர்ணலதாவும் இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்.

இதற்கான ஏற்பாடுகளை ஓமந்தைவிடுதலைப் புலிகளின் கலை, கலாச்சாரப்பிரிவு மேற்

## புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகம்

பனங்கட்டிக்கொட்டு, மன்னார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியால்மன்னாரில்நடத்தப்பட்டமேதினவிளையாட்டுப் போட்டிகளில் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் 16 கழகங்கள் பங்கு பற்றின. அதில் கால் இறுதிப் போட்டியில் பேசாலை சென் மேரிஸ்விளையாட்டுக் கழகத்திற்கு பனங்கட்டிக் கொட்டுசென் ஜோசப் வி. கழகம் 6-0 கோல்களை

யாழ்நகரில் இன்றைய சினிமா

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

ராஜா (யாழ்)
150ஆவது நாளைநோக்கி வெற்றிநடை போடுகிறது
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30,2 30,6.30,10.30
ரஜனி (இரு வேடம்) ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)
நாளை முதல்
மூன்றுமுடிச்சு
அடுத்த வாரம்

மனோகரா - (யாழ்)
தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு 10-30, 2-30. 4-45, 700 & 945
DAVID WARBECK IN
THE HUNTERS OF THE GOLDEN COBRA

வெலிங்டன் யாழ்
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30,2-30, 6-30,9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45.
சனி ஞாயிறு காலை10-30 2-30 6-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
16 வயதிலே
(B/860)


ஹரன் - யாழ்
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
"நாயகன்"
75 நாட்களுக்குமேல் ஓடிய

மோல்விளையாட்டுக் கழகத்திற்கு பனங்கட்டிக் கொட்டுசென் ஜோசப் வி. கழகம் 6-0 கோல்களை போட்டும் அரை இறுதிப் போட்டிகளில் எருக்கலம் பிட்டி மெறக்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கு 6-1 கோல்களைப் போட்டும்,

இறுதி ஆட்டத்தில் அல்பதா விளையாட்டுக் கழகத்திற்கு 2-1 கோல்களைப் போட்டு வெற்றி பெற்று தங்க கேடயத்தைப் பெற்றுக்கொண்டது.

(R-456)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி**

(மயில்வாகனம்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07-06-1950 | 07-05-1988 |

அன்பின் திருவுருவே, அருளின் உறைவிடமே, பண்பின் சிகரமே, நேர்மையின் சின்னமே, குடும்பத்தின் ஒளி விளக்கே எங்களைப் பற்றுடன் பேணிக்காத்து உயர்வாழ் வளித்த எங்கள் இதயப் பாசமலரே! எங்கள் எதிர்காலம் பற்றி தங்கள் உள்ளத்தில் எத்தனை கற்பனைகள் உதித் தனவோ அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையில் எங்களை விட்டுப் பிரிந்தீர்கள் மனம் துடித்தோம். அள வில்லாக் கண்ணீரை விழிகளிலே நிறைத்து விட்டு அணையா ஜோதியென ஒளியேற்றி சென்றீரே! ஈராண்டு உருண்டோடிப் போய் விட்டபோதிலும் தாயே தங்கள் அழகிய திருவுருவம் எங்கள் நெஞ்சத்தில்.

(R/ 427)


படும்

குறிப்பு- எமது Courses யாவற்றிலும் எவரும் இலகுவாக எந்தவித Computers ஐயும் கையாளத் தக்கதாக D. O. S. (Disk Operating System) முக்கியமாகக் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

**ICC**

**102, 3 ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

தலைமையகம்
425, 5/1, Star Tower,
Galle Road,
Colombo 3

(B 630)


கலை, கலாச்சாரப்பிரிவு மேற்கொண்டுள்ளது. (தி)

## மதவு திருத்த வேலை

(கரவெட்டி)

பருத்தித்துறை சாவகச்சேரி வீதியிலுள்ள பளகளி மதவு நீண்ட காலமாக சேதமான நிலையில் காணப்படுவதனால் வாகனசாரதிகளும் பாதசாரிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

இலங்கை இராணுவத்தினால் 87 ஆம்ஆண்டு சேதமாக்கப்பட்ட மேற்படி வீதி இந்திய இராணுவத்தாலும்தமது பாதுகாப்புகருதி சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மதவு திருத்தப் பட்டால் சாவச்சேரி பருத்தித்துறை பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4ஆம் ஆண்டு வீர அஞ்சலி



வீர ஜனனம்
28 - 05 - 1961

**லெப். கந்தன்**
(எட்மன் சத்தியசீலன்)
பருத்தித்துறை

வீர மரணம்
20 - 04 - 1986



வீர ஜனனம்
17 - 03 - 1963

**லெப். ரமணன்**
(இராசசேகரம் பிரேமச்சந்திரன்)
வல்வெட்டித்துறை

நீங்கள் அன்று சிந்திய குருதி
அன்றே காய்ந்து விட்டது.
ஆனால், இன்றும் அம்மண்
செந்நிறமே தான்
உங்கள் உடல்கள்
அன்றே குளிர்ந்து விட்டன
ஆனால், இன்றும்
உங்கள் துப்பாக்கிகள்
கனன்று கொண்டே இருக்கின்றன.

நண்பர்கள்

(R 459)


மூன்றுமுடிச்சு
அடுத்த வாரம்
மௌனராகம்

நாயகன்
75 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)

B 887


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இளம்புலி 'அல்வின்'**

செல்வன் அமிர்தலிங்கம் சற்குணராசா

| அன்னை மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 20 - 1 - 1961 | 7 - 5 - 1987 |

தமிழ் மண்ணைக் காக்கவெனச் சங்கற்பஞ்செய்து
சாகும்வரை குறிக்கோளை நிறைவேற்றி வைத்தாய்!
நற்குணனாய் நன்மக்கள் மனதினிலே நிறைந்து நின்று
சற்குணனே தாய் மண்ணை அடைந்திட்டாய் நீ!

அல்வின் எனப் பெயர் கொண்டாய்
அண்ணன் வழி நடந்து அன்புடனே
வீரவேங்கை என வீறுநடை போட்டாய்
வீழ்ந்திட்டாய் விடுதலைக்காய் உன்நாமம்
என்றும் வாழும்!

குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்,

'யாவத்தை'
வதிரி, அல்வாய்.

(B/880)

# கியூபாவில் இராணுவம் உஷார் நிலையில்

# அமெரிக்கா தாக்கலாம் என எதிர்பார்ப்பு

(பொகோடா)

அமெரிக்கா கியூபா மீது இராணுவத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளக் கூடும் என்ற அச்சத்தினால் நேற்று முன்தினம் கியூபாவில் இராணுவம் ஊஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

கரேபியன் கடலில் அமெரிக்க இராணுவம் நடாத்திய இராணுவ ஒத்திகைகளைத் தொடர்ந்தே கியூபா ஊஷார் நிலை அடைந்தது. நான்கு உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் வெள்ளியன்று மதியவேளை கியூபா ரி. வி நிகழ்ச்சியில் தோன்றி நாடு தழுவிய பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி மக்களுக்கு விளக்கினார்கள்.

நாம் எமது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளோம். எனவே அமெரிக்கா எம்மீது திடீரெனத் தாக்கி எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்த முடியாதென்றார் கியூபா விமானப் படைத் தளபதி மார்டினஸ்.

கியூபாவின் தலைநகரான ஹெவென்னாவுக்கு அருகாமையில் சோவியத் தயாரிப்பான மிக் 29 சண்டை விமானங்கள் ஒத்திகை, கிழக்கு கியூபாவில் தாங்கிகள் அணிவகுப்பு,இரவில் பெண்கள் விமான எதிர்ப்புப் படையின் ஒத்திகைகள் ஆகியனவெள்ளியன்று இடம் பெற்றன. இந்த இராணுவப் பயிற்சிகளும், ஒத்திகைகளும் நாடு பூராகவும் ரி. வி யில் ஒளிபரப்பாகியது.

கரேபியன் கடலில் அமெரிக்க இராணுவ ஒத்திகைகள் கியூபாமீது தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடு அல்ல என்று அமெரிக்கா மறுத்துள்ளது.

எமது இராணுவ ஒத்திகைகள் கியூபாவிற்கு எதிரானவை என்றும், அவை கியூபாவைத் தாக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டவை என்று கியூபா எம்மீது குற்றஞ்சாட்டியுள்ளது. இது முற்றிலும் தவறான எண்ணமாகும். கரேபியனில் நாம் மேற்கொண்ட ஒத்திகைகள் மாமுலானவை- இவ்வாறு அமெரிக்க ராஜாங்க திணைக்களப் பேச்சாளர் றிச்சேட் வாஷிங்டனில் தெரிவித்தார்.

மாஸ்கோவுக்கும், வாஷிங்டனுக்குமிடையில் உறவுகள் சீரடைந்து அமெரிக்க ஜனாதிபதியும், சோவியத்தலைவரும் பேச்சுவார்த்தை நடாத்த உள்ளவேளையில் இந்த இராணுவ ஒத்திகைஇடம்பெற்றுள்ளதாக கியூபா கம்யூனிஸ்ட் கட்சித் தினசரி கிரம்மா கூறுகிறது.

## லட்வியாவிற்கு பதிலடி! கோர்பசேவ் எச்சரிக்கை

(மொஸ்கோ)

லட்விய சுதந்திர பிரகடனத்திற்கு மொஸ்கோ பதிலடி கொடுக்குமென சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் எச்சரித்து இருக்கிறார்.

லட்வியாவின் இந்தப் பிரகடனம், சோவியத் அரசின் அரசியல் சாசனத்தை மீறக் கூடிய செயல் என்றும், இதனால் அரசியல், பொருளாதார, நிர்வாக நடவடிக்கைகளை எடுத்து பதிலடி கொடுக்கும் உரிமை தனக்கு உண்டு என அவர் மேலும் கூறினார்.

ஆனால் லட்வியப் பிரதம மந்திரி தாம் படிப்படியாகவே சுதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் கூறியிருக்கிறார். அத்துடன் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படும் வரை சோவியத் யூனியனின் குற்றவியல் சட்டவிதிகளையே தாம் பின்பற்றப் போவதாகவும் கூறினார்.

## மது விலக்கு கருத்தரங்கு

காரைநகர் போரூட் அலுவலகத்தில் '' மதுவிலக்கும் போதைவஸ்தின் தீமையும்', என்ற பொருள் பற்றிகருத்தரங்கும் கலந்துரையாடலும் அண்மையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறைப்பகுதி நல்லொழுக்க சங்கங்களுக்கான இந்த கருத்தரங்கில் போரூட் உத்தியோகத்தர்திரு. வீ. என் மூர்த்தி உரையாற்றினார்.

## பெனாசிரின் தாயார் சீனா விஜயம்

(பீக்கிங்)

பாகிஸ்தானின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான பேகம் நசிராபூட்டோ சீனா விற்கு விஜயம் மேற்கொள்ள விருக்கிறார்.

இவர் பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாசிர் பூட்டோவின் தாயார் ஆவார். பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவி என்ற ரீதியில் பேகம் பூட்டோ இந்த விஜயத்தை மேற் கொள்கிறார்.

பீக்கிங்கில் சீனகம்யுனிச கட்சித் தலைவரை இவர் சந்திப்பார்.பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் சீன கம்யுனிச கட்சிக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பது இந்த விஜயத்தின் நோக்கம் எனவும் கூறப்படுகிறது.

காஸ்மீர் குறித்து இந்தியாவிற்கும்பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராற்றில் பாகிஸ்தானுக்கு சீனாவின் ஆதரவு உண்டு என்ற உறுதியை பேகம் பூட்டோ எதிர்பார்ப்பார் என மேற்குலக தூதரக அதிகாரிகள் கூறுகின்றனர்.

## ஊரியான் உபகுழுபகுதிக்கு நீர் வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

இம்முறை மேற்கொள்ளப் பட இருக்கும் சிறுபோக நெற்செய்கையின் போது நீர் வழங்காது விடப்பட்ட இரணைமடுத்திட்ட ஊரியான் உப குழுப் பகுதிக்கு நீர் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்துள்ளனர்.

ஊரியான் உப குழுப்பகுதியில் விவசாயம் செய்து வரும் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வயல் நிலங்களுக்கு சிறுபோக நெற்செய்கைக்கு நீர் வழங்காது விட்டதையிட்டுத் தமது குழுத் தலைவர் திரு. மு. கந்தசாமி தலைமையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர், நீர்பாசனப் பொறியிலாளர் திரு நவரத்தினராசா திட்டமுகாமையாளர் திரு. வி கதிரவேலு ஆகியோரிடம் சென்று முறையிட்டனர்.

இப்புகார் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுப் பின் விடுபட்ட மேற்படி பகுதிக்கு நீர் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தட்சர் · மண்டேலா சந்திப்பு

## தென்.ஆபி.மீது பொருளாதாரதடை விதிக்க மண்டேலா தட்சரைக் கோருவார்

(லண்டன்)

ஆபிரிக்க தேசிய காங்கிரசை முன்னர் பயங்கரவாத இயக்கம் என்று வர்ணித்த இங்கிலாந்துப் பிரதமர் தட்சர் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உப - தலைவரான நெல்சன் மண்டேலாவை உத்தியோக பூர்வமாகச் சந்திக்கவுள்ளார். நெல்சன் மண்டேலா ஜூலை 3ஆம், 4ஆம் திகதிகளில் லண்டனுக்கு விஜயம் செய்யும் போது இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் இனவாதக் கொள்கைக்கெதிராக மற்ற நாடுகள் விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை வன்மையாக எதிர்த்த தட்சர், 27 வருட சிறைவாசத்துக்குப் பிறகு, மண்டேலா விடுதலையானதும், இங்கிலாந்துக்கு விஜயம் செய்யுமாறு அவரை அழைத்திருந்தார்.

ஆனால், லண்டனில் நிகழ்ந்த றொக் நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய மண்டேலா தட்சரின் அழைப்பை நிராகரித்ததோடு தட்சரின் தென் ஆபிரிக்காவின் இனவாதக் கொள்கைக்கு ஆதரவான போக்கைக் கண்டித்தார்.

மண்டேலா இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேட்டையும், தொடர்ந்தாற்போல் ஐரிஷ் பிரதமர் சார்ள்ஸையும் தனது லண்டன் விஜயத்தின்போது சந்திப்பார் என்று நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தென் ஆபிரிக்காவின் இனவாதக் கொள்கைக்கு எதிராகத் தடைகளை ஏற்படுத்தும்படி தான் தட்சரைக் கோரப்போவதாகவும், தென் ஆபிரிக்காவில் இனவாதம் ஒழியும் வரையும் தடைகள் நிலைத்திருக்க வேண்டும் என்றார் மண்டேலா.

இனவாதத்துக்கு எதிராக லண்டனை மையமாகக் கொண்டியங்கும் இயக்கம் ஒன்

## மக்கள் நலன்காக்கும் பிரிவு கோப்பாயில் வங்கிச் சேவை

(சுதுமலை)

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு வங்கி சேவை ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இதற்காக சிக்கன சேமிப்பு சங்கம் ஒன்றை ஏற்படுத்தி கோப்பாய் பிரிவை உள்ளடக்

கின்றார்கள்.

இத்தொழில்களினால் அவர்களுக்குக் கிடைக்கும் இலாபத்தின் ஒரு பகுதியைக் கொண்டு தாம்பெற்ற கடனை மாதா மாதம் திருப்பி செலுத்தி வருகின்றார்கள்.

## நயினாதீவில் மாபெரும் விளையாட்டுப் போட்டி

(நயினாதீவு)

நயினாதீவு சனசமூக நிலையங்களின் சமாஜம் முதன் முதலாக மாபெரும் விளையாட்டு விழாவை நடாத்தியது

## மறுமலர்ச்சிக்

சமாஜத்தின் தலைவர் திரு. செ. நா. துரைராசா தலைமையில் ஒன்பது நாட்கள் இவ் விழா நடைபெற்றது. பல்வேறு விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

அதிக புள்ளிகளைப்பெற்று ஸ்ரீகணேச சனசமூக நிலையம்

## சட்டவிரோத பாவனையாளரால் ஊழியர் தாக்கப்பட்டார்

(நல்லூர்)

நேற்றுக் காலை நல்லூர் அபிவிருத்திசபை உப அலுவலகக் கொக்குவில் மின்சாரப் பகுதி ஊழியர் இரத்தின சபாபதி என்பவர் சட்ட விரோதமான மின்பாவனையை தடுக்கமுற்பட்ட

கடை உரிமையாளரால் அச்சுறுத்தப்பட்டனர். இதன் எதிரொலியாக நேற்றுக் காலை கொக்குவில் உப அலுவலக மின்சாரப் பகுதி முழுவதும் மின் தடை ஏற்பட்டது இதனால் மின்பாவனையாளர்கள் அவதிக்குள்ளா

இதற்காக சிக்கன சேமிப்பு சங்கம் ஒன்றை ஏற்படுத்தி கோப்பாய் பிரிவை உள்ளடக்கிய மக்களை அங்கத்தவர்களாகச் சேர்த்து நலிவுற்ற அங்கத்தவர்களுக்கு சுமார் 3000 ரூபா வரையிலான கடன் உதவிகளைச் செய்து கொடுத்துள்ளது.

அங்கத்தவர்கள் இக்கடன்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமாக கோழிப் பண்ணை அமைத்தும் சிறு குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பித்தும் நடாத்தி வருகின்றனர். தாம் பெற்ற கடனை மாதா மாதம் திருப்பி செலுத்தி வருகின்றார்கள்.

இதுபற்றி மக்கள் நலன் காக்கும் பிரிவின் செயலாளர் தகவல் தருகையில் அங்கத்தவர்களின் நம்பிக்கை, நாணயம் என்பனவற்றைக் கொண்டே இச்சேவையை அளித்து வருகின்றோம். இத்திட்டம் வெற்றியளிக்குமேயானால் கடன் உதவியை இரட்டிப்பாக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம் என்றார். (19)

## மறுமலர்ச்சிக் கழகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் முஸ்லீம் மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மறுமலர்ச்சிக்கழகத்தில் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலக உறுப்பினரான திரு. ரவி கலந்து கொண்டு இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முஸ்லீம் மக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு பற்றியும் விரிவாக எடுத்து விளக்கினார்

அதன்பின்னர் மாணவர்கள் தொடுத்த பல கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இடம்பெற்றன.

அதிக புள்ளிகளைப்பெற்று ஸ்ரீகணேச சனசமூக நிலையம் முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக்கேடயத்தை தட்டிக் கொண்டது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா, வேலணை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. வே. கந்தசாமி ஆகியோர் பிரதம அதிதியாக இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் நயினாதீவில் இவ்வாறான விளையாட்டுப் போட்டி நடைபெற்றது இங்கு குறிப்பிடத் தக்கது.

சபாபதி என்பவர் சட்ட விரோதமான மின்பாவனையை தடுக்கமுற்பட்ட பொழுது கொக்குவில் சந்திக் கடை உரிமையாளரால் தாக்கப்பட்டார்

இச் சம்பவத்தினை அறிந்த மின்சாரப் பகுதி உயர் அதிகாரிகள் அவ்விடம் சென்று விசாரணை நடத்திய போது முழுவதும் மின் தடை ஏற்பட்டது இதனால் மின்பாவனையாளர்கள் அவதிக்குள்ளானார்கள்

இது சம்பந்தமாக அதிகாரிகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இனவாதத்துக்கு எதிராக லண்டனை மையமாகக் கொண்டியங்கும் இயக்கம் ஒன்றின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தச் சந்திப்பின் போது ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நிலைப்பாட்டினை இங்கிலாந்து அரசாங்கம் புரிந்து கொள்ளும் என்றும், சர்வதேச சமூகம் இங்கிலாந்தின் பக்கம் பிழை உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளும் என்றார்.

1987இல் வான்கோவரில் நடந்த பொதுநலவாய நாடுகளின் உச்சி மாகாநாட்டின் போது தென் ஆபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் தொடர்பான வாக்குவாதத்தில் இங்கிலாந்துப் பிரதமர் மாகிரெட் தட்சர் ஆபிரிக்க தேசிய காங்கிரசை இன்னுமொரு பயங்கரவாத இயக்கமென்று வர்ணித்தார்.

நெல்சன் மண்டேலாவுக்கு அழைப்பு விடுத்திருக்கும் தட்சர், இதேவேளை தென் ஆபிரிக்கா ஜனாதிபதியையும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யுமாறு அழைத்துள்ளார். அழைப்பை ஏற்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி கிளார்க் மே மாதம் கடைசிப்பகுதியில் இங்லாந்து வரவுள்ளார்.

தட்சர் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் சீர்திருத்த திட்டங்களுக்கு ஆதரவு தேடும் வகையில் இவ்வாண்டு இறுதியில் தென் ஆபிரிக்கா செல்லவுள்ளார். தான் தெ. ஆபிரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வதற்கு முன் மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையையும் தட்சர் தெ. ஆபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன் மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளையும் தச்சர் தெ. ஆபிரிக்க அரசாங்கத்துக்கு விதித்திருந்தார்

தென் ஆபிரிக்க அரசாங்கத்துடன் ஆபிரிக்க காகிரசுக்கு ஒரு உடன்பாடு ஏற்படும் வரையில் பிறிற்ரோறியாவில் மாக்கிறட் தட்சரின் விஜத்தை தாம் வரவேற்கப் போவதில்லை என்றார் மண்டேலா.

## கிளிநொச்சி கிரிக்கெட் குழு கொழும்பு பயணமானது

(கிளிநொச்சி)

அகில இலங்கை ரீதியாக கொழும்பில் நடைபெறும் 6 ஓவர் மென்பந்து கிரிக்கற் சுற்றுப் போட்டியில்கலந்துகொள்வதற்காக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 9பேர் கொண்ட விளையாட்டுக் கோஷ்டிஒன்று கொழும்பு சென்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டவிளையாட்டு அதிகாரி திரு. எஸ் கனகராசவினால்அழைத்துச் செல்லப்படும் இக்கோஷ்டியின் கப்டனாக திரு. . கோபுதாஸ் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இக் கோஷ்டியைச் சேர்ந்த ஏனைய வீரர்களின் பெயர்கள் பின்வருமாறு.

எஸ். தேவானந்தன், எஸ். ரகு நிமால் விக்கினேஸ்வரன், ரி. தயாளன், எம். பால்ராஜ் எஸ். சேகர், எஸ். குமார், ஆர். ஜொனி.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்லும் முதலாவதுகிரிக்கெட் கோஷ்டி இது என்பதும் குறிப்பிடத் தக்கது. (49)

## கிளிநொச்சி நகரத்தை திட்டமிட்டு அமைக்கவேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை திட்டமிட்டு அமைக்க வேண்டும். இதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும். கடந்த காலங்களில் திட்டமிட்டு நகரை அமைத்திருந்தால் நகர் எவ்வளவோ அழகாக, ஒழுங்காக அமைந்திருக்கும்.

கிளிநொச்சி கச்சேரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகள் எதிர்காலத்திலும் ஏற்படாது இருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. ஆதலால் நகரைத் திட்டமிட்டு அமைக்க முயலவேண்டும்.

வீதிகள் அமைக்கும்போதும் வர்த்தக நிலையங்களைக் கட்டும் போதும், வீடுகளைக் கட்டும் போதும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்து திட்டமிட்ட முறையில் செயல்பட வேண்டும்.

கிளிநொச்சிச் சந்தையில் எங்கு பார்த்தாலும் கொட்டில்கள் காணப்படுகின்றன. பொது மக்கள் சந்தைக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாது இருக்கிறது. ஆதலால் அங்குள்ள கொட்டில்கள் அகற்றப்பட வேண்டும். நல்ல கட்டிடங்கள் அமைக்கப்படவேண்டும். பஸ் நிலையமும் திட்டமிட்ட முறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றார்.

## பெரியநீலாவணை மக்கள்முன்னணி கிளை

(அம்பாறை)

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த பெரியநீலாவணையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. அ. வேதநாயகம். உபதலைவர் திரு. ச. போசன். செயலாளர் திரு. பா. பரமநாதன், உபசெயலாளர் திரு. பொ. சிவராசா, பொருளாளர் திரு. கு. கனகலிங்கம்

மற்றும் 20 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (48)

## யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் ஒப்படைக்க முடியவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயலகத்திலுள்ள பிறப்பு இறப்பு விண்ணபபங்கள் ஏற்கும் பகுதியில் பலர் விண்ணப்பங்களை ஒப்படைக்க முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

நண்பகல் 11 மணியுடன் இந்த வேலைகள் முடிவடைவதாலும் பதிவு இலக்கம் தெரிந்த விண்ணப்பங்களும், பதிவு இலக்கம் தெரியாத விண்ணப்பங்களும் ஒரே கருமபீடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதுமே இவ்வாறு பொதுமக்கள் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் விண்ணப்பங்கள் ஒப்படைக்கும் கருமபீடத்தில் பொதுமக்கள் அங்குள்ள கம்பிவலையில் ஒரு கையால் பிடித்துத் தொங்கிக் கொண்டே தமது விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

## மூடப்பட்ட பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால சூழ்நிலை காரணமாக மூடப்பட்டுள்ள மூன்று ஆரம்ப பாடசாலைகளில் மதுரங்கேணிகுளம் அ. த. க. பாடசாலைமீண்டும் செயல்படுகிறது.

கிரிமிச்சை அ. த. க. பாடசாலை வடமுனை அ. த. க பாடசாலை என்பன மூடப்பட்ட நிலையிலுள்ளது.

மேற்படி இரு பாடசாலைகளும் திறக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை தவிரவேறு கோரிக்கைகள் எதுவுமில்லை எனவாகரை நடமாடும்செயலகத்தில் கல்வி இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## பத்திரிகைகளுக்கு அரச அதிபரைத் தவிர தகவல் வழங்கக் கூடாது

(வவுனியா)

அரசாங்க அதிபரைத் தவிர வேறு எந்த அதிகாரியும் பத்திரிகையாளர்களுக்குச் செய்திகளோ அல்லது தகவல்களோ வழங்கக்கூடாது என்று சுற்றறிக்கையொன்று வவுனியா கச்சேரிக்கு வந்திருப்பதாக கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எல்லா அதிகாரிகளும் செய்திகள் வழங்குவதால், ஒரு செய்தி வெவ்வேறு அர்த்தங்களில் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிபருக்கு மட்டுமே செய்தி வழங்கு உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாகவும், தன்னைப்போன்ற கீழ் அதிகாரிகளினால் பத்திரிகைகளுக்கு செய்திகள் தரமுடியாது என்றும் அவர் வருத்தத்துடன் தெரிவித்தார். (தி)

## மரக்கூட்டுத் தாபன டிப்போ கிளிநொச்சியில் அமையும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபன டிப்போ ஒன்று வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் மேற்கொண்டு வருகிறார்

கிளிநொச்சி மாவட்டத்தில் மரத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மரத்தொழிலை நம்பி வாழ்ந்து வந்த மக்கள் தொழில் செய்ய மரம் இல்லாததனால் பெரும் கஷ்டப் படுகிறார்,

புதிய வீடுகளைக் கட்டுபவர்கள் தமது வீட்டுக் கூரைக்குப் போடுவதற்கும் வீட்டிற்குத் தளபாடங்களைச் செய்வதற்கும் கூட மரம் கிடைப்பது மிகவும் கஷ்டமாகஇருந்து வருகிறது.

இக் கஷ்டங்களைப் போக்கவே அரசாங்க அதிபர் இங்கு ஒரு மர டிப்போவைத் திறந்து வைக்க முயற்சி எடுத்து வருகிறார். (49)

## ஜப்பான் உல்லாசப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நடப்பு வருடத்தில் 20,000க்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வரவிருக்கிறார்கள். 1985ஆம் ஆண்டில் 23,000 ஜப்பானிய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். ஜப்பானிய உல்லாசப்பயணிகளின் இலங்கை வருகை சென்ற ஆண்டு 11,294 ஆகக் குறைந்தது.

1992இல் 30,000 ஜப்பானிய உல்லாசப்பயணிகள் இலங்கை வரவுள்ளதாக பிரயாண முகவர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மற்ற நாட்டு உல்லாசப் பயணிகளைவிட ஜப்பானியர் அதிக பணம் இலங்கையில் செலவு செய்வதாக உல்லாசப் பயணிகள் சபைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

1990 – 1991 காலப் பகுதியில் ஜப்பானிய உதவியைப் பெறும் நாடுகளில் இலங்கை எட்டாவது இடம் வகிக்கின்றது.

## கம்பன் கழகம்

(நயினாதீவு)

நயினாதீவில் கம்பன்கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்திரு க. நாகேஸ்வரன் இதனை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

# தீவகத்தின் தியாக தீபங்கள்!

| வீரஜனனம் | இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | தாயக மண் | வீரமரணம் |
|---|---|---|---|---|
| 31.05.1965 | தனபால் (வரன்) | தி. வரேந்திரன் | காரைநகர் | 13.02.1984 |
| 11.10.1964 | கிட்லர் | க. நடராசா | காரைநகர் | 15.02.1984 |
| 02.05.1959 | செல்வம் | அ. பகீர் | மண்டைதீவு | 18.05.1984 |
| 23.07.1969 | கார்த்திக் | கார்த்தீஸ்வரன் | நெடுந்தீவு | 27.07.1984 |
| 08.01.1969 | நிதி | சி. சிவசிகாமணி | நயினாதீவு | 17.05.1986 |
| 17. .1967 | அலெக்ஸ் | நா. அரிஹரன் | புங்குடுதீவு | 17.05.1986 |
| — | கப்டன் றெஜி | சு. மகேந்திரராஜா | காரைநகர் | - - 1986 |
| 23.09.1965 | மனோரஞ்சன் | நா. மனோரஞ்சன் | புங்குடுதீவு | 26.03.1987 |
| 03.12.1967 | ஷெனித் | நா. ஜெயப்பிரகாஷ் | – | 08.04.1987 |
| 22.08.1968 | லெப். இளங்கோ | மா. சோதிலிங்கம் | காரைநகர் | 14.10.1987 |
| 04.11.1968 | 2-வது லெப் மயூரன் | ச. லோகேஸ்வரன் | காரைநகர் | 08.11.1987 |
| — | அப்ஸ் | அ. அரவிந்தன் | புளியங்கூடல் | 21.12.1987 |
| 27.12.1967 | லெப். சாந்தன் | மா.ஷெலஸ்ரீன் தேவராஜ் | நெடுந்தீவு | 27.12.1987 |
| 12.04.1962 | 2-வது லெப் ஜனா | நா. சிவகுமார் | நயினாதீவு | 31.01.1988 |
| 23.08.1969 | லெப். குட்டி | யோகேஸ்வரன் | நெடுந்தீவு | 08.04.1988 |
| 18.10.1960 | கப்டன் அருள் | ஏ. பாலச்சந்திரன் | புங்குடுதீவு | 09.04.1988 |
| 02.08.1965 | உதயன் | தெ. உதயசூரியன் | காரைநகர் | 24.10.1988 |



| வீரஜனனம் | இயக்கப்பெயர் | சொந்தப்பெயர் | தாயக மண் | வீரமரணம் |
|---|---|---|---|---|
| -- | சக்கரை | த. துரைராஜா | காரைநகர் | 19.11.1988 |
| 23.06.1968 | கோபி | ஆ. தவபாலன் | காரைநகர் | 19.11.1988 |
| 23.08.1965 | 2-வது லெப். சூரி | ம. சூரியகுமார் | காரைநகர் | 26.11.1988 |
| -- | ரெத்தினம் | வை. நவரெத்தினம் | புங்குடுதீவு | – 1988 |
| 03.10.1969 | லெப். நந்தன் | க. லோகேஸ்வரன் | காரைநகர் | 01.11.1988 |
| 02.02.1958 | கப்டன் ரூபன் | க. கந்தசாமி | மண்டைதீவு | 02.02.1989 |
| — | 2வது லெப் சந்திரன் | நா. சந்திரகுமார் | காரைநகர் | 15.02.1989 |
| 03.12.1971 | கண்ணன் | நவயோகராஜா | காரைநகர் | 15.02.1989 |
| 20.10.1968 | பரமேஷ் | ச. பரமேஷ்வரன் | காரைநகர் | 14 03.1989 |
| 20.07.1971 | முஸ்தபா | செ. செபஸ்ரியாம்பிள்ளை | நெடுந்தீவு | 14.03,1989 |
| 07.03.1971 | செந்தில் | மு. டோமினிக் | புங்குடுதீவு | - 1989 |
| - 1950 | தேசிங்கன் | சி. சிவகுமார் | புங்குடுதீவு | – 1989 |
| 25.04·1970 | நெல்சன் | ப.நோபர்ட் (ஜோர்ஜ்) | நெடுந்தீவு | 20.04.1989 |
| 28.11.1969 | நாகேஷ் | ப. நாகேஷ் | காரைநகர் | 14.07.1989 |
| - | கப்டன் ரங்கன் | வி. ரங்கநாதன் | காரைநகர் | 14.09.1989 |
| 26.09.1967 | 2வது லெப். றேகன் | தி. சிவபாலன் | காரைநகர் | 07.02.1990 |
| 22.06.1969 | விசைவீரன் | அ. அருளேஸ்வரன் | காரைநகர் | 22,03.1990 |

இதற்காக சிக்கன சேமிப்பு சங்கம் ஒன்றை ஏற்படுத்தி கோப்பாய் பிரிவை உள்ளடக்கிய மக்களை அங்கத்தவர்களாகச் சேர்த்து நலிவுற்ற அங்கத்தவர்களுக்கு சுமார் 3000 ரூபா வரையிலான கடன் உதவிகளைச் செய்து கொடுத்துள்ளது.

அங்கத்தவர்கள் இக்கடன்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமாக கோழிப் பண்ணை அமைத்தும் சிறு குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பித்தும் நடாத்தி வருகொண்டு தாம்பெற்ற கடனை மாதா மாதம் திருப்பி செலுத்தி வருகின்றார்கள்.

இதுபற்றி மக்கள் நலன் காக்கும் பிரிவின் செயலாளர் தகவல் தருகையில் அங்கத்தவர்களின் நம்பிக்கை, நாணயம் என்பனவற்றைக் கொண்டே இச்சேவையை அளித்து வருகின்றோம். இத்திட்டம் வெற்றியளிக்குமேயானால் கடன் உதவியை இரட்டிப்பாக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம் என்றார். (19)

## மறுமலர்ச்சிக் கழகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் முஸ்லீம் மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மறுமலர்ச்சிக்கழகத்தில் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலக உறுப்பினரான திரு. ரவி கலந்து கொண்டு இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முஸ்லீம் மக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு பற்றியும் விரிவாக எடுத்து விளக்கினார்.

அதன்பின்னர் மாணவர்கள் தொடுத்த பல கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இடம்பெற்றன.

அதிக புள்ளிகளைப்பெற்று ஸ்ரீகணேச சனசமூக நிலையம் முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக்கேடயத்தை தட்டிக் கொண்டது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ்.டிவகலாலா, வேலணை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. வே. கந்தசாமி ஆகியோர் பிரதம அதிதியாக இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நீண்டநாட்களுக்குப் பின்னர் நயினாதீவில் இவ்வாறான விளையாட்டுப் போட்டி நடைபெற்றது இங்கு குறிப்பிடத் தக்கது.

சபாபதி என்பவர் சட்ட விரோதமான மின்பாவனையை தடுக்கமுற்பட்ட பொழுது கொக்குவில் சந்திக் கடை உரிமையாளரால் தாக்கப்பட்டார்

இச் சம்பவத்தினை அறிந்த மின்சாரப் பகுதி உயர் அதிகாரிகள் அவ்விடம் சென்று விசாரணை நடத்திய போது முழுவதும் மின் தடை ஏற்பட்டது இதனால் மின்பாவனையாளர்கள் அவதிக்குள்ளானார்கள்

இது சம்பந்தமாக அதிகாரிகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இனவாதத்துக்கு எதிராக லண்டனை மையமாகக் கொண்டியங்கும் இயக்கம் ஒன்றின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தச் சந்திப்பின் போது ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நிலைப்பாட்டினை இங்கிலாந்து அரசாங்கம் புரிந்து கொள்ளும் என்றும், சர்வதேச சமூகம் இங்கிலாந்தின் பக்கம் பிழை உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளும் என்றார்.

1987இல் வான்கோவரில் நடந்த பொதுநலவாய நாடுகளின் உச்சி மாகாநாட்டின் போது தென் ஆபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் தொடர்பான வாக்குவாதத்தில் இங்கிலாந்துப் பிரதமர் மாகிரெட் தட்சர் ஆபிரிக்க தேசிய காங்கிரசை இன்னுமொரு பயங்கரவாத இயக்கமென்று வர்ணித்தார்.

நெல்சன் மண்டேலாவுக்கு அழைப்பு விடுத்திருக்கும் தட்சர், இதேவேளை தென் ஆபிரிக்கா ஜனாதிபதியையும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யுமாறு அழைத்துள்ளார். அழைப்பை ஏற்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி கிளார்க் மே மாதம் கடைசிப்பகுதியில் இங்லாந்து வரவுள்ளார்.

தட்சர் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் சீர்திருத்த திட்டங்களுக்கு ஆதரவு தேடும் வகையில் இவ்வாண்டு இறுதியில் தென் ஆபிரிக்கா செல்லவுள்ளார். தான் தெ. ஆபிரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வதற்கு முன் மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையையும் தட்சர் தெ. ஆபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன் மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளையும் தச்சர் தெ. ஆபிரிக்க அரசாங்கத்துக்கு விதித்திருந்தார்

தென் ஆபிரிக்க அரசாங்கத்துடன் ஆபிரிக்க காகிரசுக்கு ஒரு உடன்பாடு ஏற்படும் வரையில் பிறிற்ரோறியாவில் மாக்கிறட் தட்சரின் விஜத்தை தாம் வரவேற்கப் போவதில்லை என்றார் மண்டேலா.

## கிளிநொச்சி கிரிக்கெட் குழு கொழும்பு பயணமானது

(கிளிநொச்சி)

அகில இலங்கை ரீதியாக கொழும்பில் நடைபெறும் 6 ஓவர் மென்பந்து கிரிக்கற் சுற்றுப் போட்டியில்கலந்துகொள்வதற்காக கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 9பேர் கொண்ட விளையாட்டுக் கோஷ்டிஒன்று கொழும்பு சென்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டவிளையாட்டு அதிகாரி திரு.எஸ் கனகராசவினால்அழைத்துச் செல்லப்படும் இக்கோஷ்டியின் கப்டனாக திரு. . கோபுதாஸ் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இக் கோஷ்டியைச் சேர்ந்த ஏனைய வீரர்களின் பெயர்கள் பின்வருமாறு.

எஸ். தேவானந்தன், எஸ். ரகு நிமால் விக்கினேஸ்வரன், ரி.தயாளன், எம். பால்ராஜ் எஸ்.சேகர், எஸ்.குமார், ஆர். ஜொனி.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்லும் முதலாவதுகிரிக்கெட் கோஷ்டி இது என்பதும் குறிப்பிடத் தக்கது. (49)

## கிளிநொச்சி நகரத்தை திட்டமிட்டு அமைக்கவேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை திட்டமிட்டு அமைக்க வேண்டும். இதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும். கடந்த காலங்களில் திட்டமிட்டு நகரை அமைத்திருந்தால் நகர் எவ்வளவோ அழகாக, ஒழுங்காக அமைந்திருக்கும்.

கிளிநொச்சி கச்சேரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகள் எதிர்காலத்திலும் ஏற்படாது இருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. ஆதலால் நகரைத் திட்டமிட்டு அமைக்க முயலவேண்டும்.

வீதிகள் அமைக்கும்போதும் வர்த்தக நிலையங்களைக் கட்டும் போதும், வீடுகளைக் கட்டும் போதும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்து திட்டமிட்ட முறையில் செயல்பட வேண்டும்.

கிளிநொச்சிச் சந்தையில் எங்கு பார்த்தாலும் கொட்டில்கள் காணப்படுகின்றன. பொது மக்கள் சந்தைக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாது இருக்கிறது. ஆதலால் அங்குள்ள கொட்டில்கள் அகற்றப்பட வேண்டும். நல்ல கட்டிடங்கள் அமைக்கப் படவேண்டும். பஸ் நிலையமும் திட்டமிட்ட முறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றார்.

## பெரியநீலாவணை மக்கள்முன்னணி கிளை

(அம்பாறை)

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த பெரியநீலாவணையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. அ. வேதநாயகம். உபதலைவர் திரு.ச. போசன். செயலாளர் திரு. பா. பரமநாதன், உபசெயலாளர் திரு. பொ.சிவராசா, பொருளாளர் திரு. கு. கனகலிங்கம்

மற்றும் 20 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (48)

## மரக்கூட்டுத் தாபன டிப்போ கிளிநொச்சியில் அமையும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபன டிப்போ ஒன்று வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் மேற்கொண்டு வருகிறார்

கிளிநொச்சி மாவட்டத்தில் மரத்திற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மரத் தொழிலை நம்பி வாழ்ந்து வந்த மக்கள் தொழில் செய்ய மரம் இல்லாததனால் பெரும் கஷ்டப் படுகிறார்,

புதிய வீடுகளைக் கட்டுபவர்கள் தமது வீட்டுக் கூரைக்குப் போடுவதற்கும் வீட்டிற்குத் தளபாடங்களைச் செய்வதற்கும் கூட மரம் கிடைப்பது மிகவும் கஷ்டமாகஇருந்து வருகிறது.

இக் கஷ்டங்களைப் போக்கவே அரசாங்க அதிபர் இங்கு ஒரு மர டிப்போவைத் திறந்து வைக்க முயற்சி எடுத்து வருகிறார். (49)

### யாழ். செயலகத்தில்

## பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் ஒப்படைக்க முடியவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயலகத்திலுள்ள பிறப்பு இறப்பு விண்ணபபங்கள் ஏற்கும் பகுதியில் பலர் விண்ணப்பங்களை ஒப்படைக்க முடியாமல் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

நண்பகல் 11 மணியுடன் இந்த வேலைகள் முடிவடைவதாலும் பதிவு இலக்கம் தெரிந்த விண்ணப்பங்களும், பதிவு இலக்கம் தெரியாத விண்ணப்பங்களும் ஒரே கருமபீடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதுமே இவ்வாறு பொதுமக்கள் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் விண்ணப்பங்கள் ஒப்படைக்கும் கருமபீடத்தில் பொதுமக்கள் அங்குள்ள கம்பி வலையில் ஒரு கையால் பிடித்துத் தொங்கிக் கொண்டே தமது விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

## மூடப்பட்ட பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால சூழ்நிலை காரணமாக மூடப்பட்டுள்ள மூன்று ஆரம்ப பாடசாலைகளில் மதுரங்கேணிகுளம் அ. த. க. பாடசாலைமீண்டும் செயல்படுகிறது.

கிரிமிச்சை அ. த. க. பாடசாலை வடமுனை அ. த. க பாடசாலை என்பன மூடப்பட்ட நிலையிலுள்ளது.

மேற்படி இரு பாடசாலைகளும் திறக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை தவிரவேறு கோரிக்கைகள் எதுவுமில்லை எனவாகரை நடமாடும்செயலகத்தில் கல்வி இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

### பத்திரிகைகளுக்கு

## அரச அதிபரைத் தவிர தகவல் வழங்கக் கூடாது

(வவுனியா)

அரசாங்க அதிபரைத் தவிர வேறு எந்த அதிகாரியும் பத்திரிகையாளர்களுக்குச் செய்திகளோ அல்லது தகவல்களோ வழங்கக்கூடாது என்று சுற்றறிக்கையொன்று வவுனியா கச்சேரிக்கு வந்திருப்பதாக கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எல்லா அதிகாரிகளும் செய்திகள் வழங்குவதால், ஒரு செய்தி வெவ்வேறு அர்த்தங்களில் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிபருக்கு மட்டுமே செய்தி வழங்கு உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாகவும், தன்னைப் போன்ற கீழ் அதிகாரிகளினால் பத்திரிகைகளுக்கு செய்திகள் தரமுடியாது என்றும் அவர் வருத்தத்துடன் தெரிவித்தார். (தி)

## ஜப்பான் உல்லாசப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நடப்பு வருடத்தில் 20,000க்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வரவிருக்கிறார்கள். 1985ஆம் ஆண்டில் 23,000 ஜப்பானிய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். ஜப்பானிய உல்லாசப்பயணிகளின் இலங்கை வருகை சென்ற ஆண்டு 11,294 ஆகக் குறைந்தது.

1992இல் 30,000 ஜப்பானிய உல்லாசப்பயணிகள் இலங்கை வரவுள்ளதாக பிரயாண முகவர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மற்ற நாட்டு உல்லாசப் பயணிகளைவிட ஜப்பானியர் அதிக பணம் இலங்கையில் செலவு செய்வதாக உல்லாசப் பயணிகள் சபைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

1990 – 1991 காலப் பகுதியில் ஜப்பானிய உதவியைப் பெறும் நாடுகளில் இலங்கை எட்டாவது இடம் வகிக்கின்றது.

## கம்பன் கழகம்

(நயினாதீவு)

நயினாதீவில் கம்பன்கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்திரு க.நாகேஸ்வரன் இதனை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

சிந்தனைக்கு

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - இது
நமக்கேயுரிமையாமென்பதறிந்தோம்

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 07 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

# றோவின் வழியில்தானா இலங்கை அரசும்?

ஸ்ரீலங்கா அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் கொழும்பு கணேமுல்ல பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ்வினரின் முகாமொன்று இயங்கி வருவதாகவும், இந்த முகாமில் சுமார் நூறுபேர் நிராயுதபாணிகளாகத் தங்கியிருப்பதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளதாகவும் நேற்று ஒரு பத்திரிகை முதல்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தியை ஈ. பி. ஆர். எல். எவ்வின் பாராளுமன்ற உறுப்பினரான கே. யோகசங்கரி மறுத்து இருப்பதாகவும் அதே பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

ஸ்ரீலங்கா படையினரின் பாதுகாப்புடன் தமது உறுப்பினர் எவரும் கொழும்பில் தங்கியிருக்கவில்லை என்று யோகசங்கரி கூறுவதாக அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

செய்திக்கு யோகசங்கரி மறுப்புத் தெரிவிப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு வழியிலும் தெருவிலும் பலாத்காரமாக சிறுவர் முதல் இளைஞர் வரை பிடித்துச் செல்லப்பட்ட சமயத்திலும் தமிழ் தேசிய இராணுவம் என்று ஒன்று இல்லையென்றும் கட்டாயமாக எவரையும் பிடிக்கவில்லையென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். உயர்பீடத்தினர் மறுத்தனர். ஆனால் இது உண்மைக்கு மாறானது என்பது பின்னர் உலகறிந்த உண்மை!

கொழும்பில் கணேமுல்லபகுதியில் ஸ்ரீலங்காபடையின் பாதுகாப்புடன் ஈ பி. ஆர். எல். எவ்வினர் நூறுபேர் தனிமுகாம் ஒன்றில் இருப்பதாக வெளிவந்த செய்தி உண்மையானால் இது மிகப் பாரதூரமானது மட்டுமல்ல ஆபத்தானதுமாகும்.

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் -1

## - சில கருத்துக்கள்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்,
தலைவர், வரலாற்றுத் துறை, யாழ். பல்கலைக் கழகம்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பற்றிய கோட்பாடு தோன்றி வளர்ந்த வரலாற்றினை உற்று நோக்கும்போது இது இந் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓர் அரசியற் கோட்பாடாக அன்றைய இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்பட்டு, பின் வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் விடுதலை இயக்கங்களாலும் வளர்க்கப்பட்டதொன்றாகவே காணப்படுகிறது. நாற்பதுகளில் (1944) இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி வட கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்குரியவர்கள் எனத் தீர்மானம் இயற்றினாலும் கூட இதற்கு மேல் இதனை அது தொடர்ந்து வற்புறுத்தி இதற்காகப் பாடுபடவுமில்லை எனலாம். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் 1949 ஆம் ஆண்டில் மருதானையிலுள்ள அரசாங்க குமாஸ்தா சேவா மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 18. 12. 1949 இல் கூறிய கருத்துக்கள், அதுவும் இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்டவை இக் கோட்பாட்டிற்கு கால்கோளாக அமைந்தன. அன்று அவர் 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இலங்கைக்கு கால் வைத்த போது இலங்கையில் இரண்டு தேசிய இனங்களாகத் தமிழர், சிங்களவர் ஆகியோர் விளங்கினர் என்றும், இவர்கள் பாரம்பரியமாகத் தனித்தனிப்பிராந்தியங்களில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்றும், இவர்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்றும் இத்தகைய சுயநிர்ணய உரிமைக்கான தகுதிகளான தொடர்ச்சியாக ஒரே பிரதேசத்தில் இவர்களின் வாழ்வு, புவியியல் ரீதியில் இவர்களின் செறிவு, கலாசார ரீதியில் உள்ள தனித்துவம், பொருளாதார வளம் ஆகியவை இத்தகைய தகுதி

யும் எனவும் கட்டியம் கூறி நின்றது.

இத்தகைய புதிய சிந்தனை ஒன்று தோன்றுவதற்கான சூழலைச் சற்று நோக்குவதும் அவசியமாகின்றது. காரணம் இதனை ஆராய்வதன் மூலம் தான் இக் கருத்தின் தாக்கத்தினைச் சரிவர மதிப்பீடு செய்யலாம். இந்நூற்றாண்டின் முதற்காலப் பகுதியில் சிங்கள மக்கள் மத்தியில் அன்றைய ஆட்சியினராகிய பிரித்தானியருக்கெதிராக இலங்கையில் தேசியவாதம் தோன்றுவதற்குப் பதிலாக முழு இலங்கையையும் தளமாகக்கொண்டு சிங்கள பௌத்த தேசியவாதம் கரையோரச் சிங்கள மக்களின் செல்வாக்கில் முன்னிலை பெற்றுக் காணப்பட்டது. 1925 இல் கண்டிச் சிங்களவர் தமக்கென ஒருசபையை 'கண்டியர் மகாசபை' என்ற பெயரில் நிறுவி 1927இல் தமது பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்குச் சுதந்திர இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றைப் பிரித்தானியர் முன்வைத்தனர். இவ்வமைப்பில் மூன்று பிராந்தியங்கள் அடங்கின. கரையோரப் பகுதிகள் கண்டிப் பகுதிகள், வடகிழக்கு இணைந்த தமிழ்ப்பகுதிகள் ஆகியனவையாகும், தமிழ் மக்களோ அன்றைய பிரித்தானியரால் வடக்குக் கிழக்குப் பகுதிகள் வளர்ச்சி அடையாத நிலையில் கொழும்பில் கிடைத்த வாய்ப்புக்களில் அக்கறை கொண்டவர்களாகி இலங்கையர் தேசியவாதத்தில் நம்பிக்கை கொண்டு ஒற்றை ஆட்சி அமைப்பிலுள்ள பாராளுமன்றத்தில் எவ்வளவு பிரதிநிதித்துவத்தினைப் பெற முடியுமோ அதனைப் பெறுவதில் அக்கறை கொண்டவர்களே ஒழிய, பிராந்திய ரீதி

புகள் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இக் காலத்தில் தான் ஐரோப்பாவில் தேசியவாத எழிச்சியினால் தேசிய அரசுகள் தோன்றிய காலமுமாகும். இத்தகைய பின்னணியை அறிந்த ஒருவர் கண்களில் தமிழ்மக்கள் தனித் தேசிய இனத்தவர்கள் என்று கணக்கப்பட்டமை வியப்பில்லை எனலாம். அன்று அவர் இலங்கைத் தீவானது மிகப் பழைய காலம்தொட்டே இரு வேறு தேசிய இனங்களால் வெவ்வேறு பகுதிகளில் உரிமை கொண்டாடப்பட்டுள்ளது. இத்தீவில் நடுப்பகுதியும் தென்பகுதியும் வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரை உள்ள மேற்குப் பகுதியும் சிங்கள இனத்தவரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இந்த இரு தேசிய இனங்களும் இவ்விரு பகுதியினரும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டவர்களாவர்.

இவரின் கூற்றையே அக்காலத்தின் பிரதம நீதிபதியாக இருந்த ஆங்கிலேயரான சேர். அலெக்ஸ்சாண்டர் ஜோன்சனும் அங்கீகரித்துள்ளார். அலெக்ஸ்சாண்டர் ஜோன்சனுக்கு இந்நாட்டு வரலாறு, சட்ட நுணுக்கங்கள் ஆகியவற்றில் நிரம்பிய பயிற்சி இருந்தது அவர் கூறியதாவது.

வட மேற்கிலுள்ள புத்தளத்திலிருந்து தென்கிழக்கேயுள்ள குமணைஆறு வரையிலுள்ள நிலப்பகுதி தமிழ்மக்களின் குடியிருப்பு ஆகும். மேற்கே சிலாபத்திலிருந்து தென் மேற்கே உள்ள குமுணஆறு வரையிலுள்ள நிலப்பகுதி சிங்கள மக்களின் குடியிருப்பாகும்.

பிரித்தானியர் ஆட்சியை ஆரம்பித்தபோது தமிழ், சிங்கள தேசிய இனங்களின்

இத்தகைய அமைப்புப்பற்றி 1956இல் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் ஒருமொழி இருநாடுகள் உருவாவதற்கு வழிவகுத்தவர் என கலாநிதி கொல்வின் ஆர். டீ. சில்வாவினால் வர்ணிக்கப்பட்டவராகிய எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா 1927இல் கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்று அவர்,

'பழையவரலாற்றைப்பார்ப்பார்களேயானால் இந்த மூன்று இனங்களாகிய தமிழரும், கரைநாட்டுச் சிங்களவரும், கண்டிச் சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்தும் ஒன்றிணையும் போக்கு எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதை இவர்கள் காண்பார்கள். இவர்கள் தங்கள் மொழியையும், பழக்க வழக்கங்களையும், மதத்தையும் பேணி இருந்தனர். இந்த வேறுபாடுகள் மெல்ல மெல்ல மறையும் என்பதில் நம்பிக்கை வைக்கும் எவனும் சிந்தித்துச் செயலாற்றாத ஒருவனாவான்.''

சிங்கள – தமிழ் தேசிய இனங்களுக்கான வேறுபாறு, பௌத்த சிங்கள மக்கள் முழு இலங்கைக்கும் தமது எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டுஆட்சிஉரிமை கொண்டாடக் கூர்மை அடைந்தது. 1919இல் இலங்கை மக்களின் சுதந்திரத்திற்காக ஒரு நிறுவனம் தேவை என எண்ணி இலங்கைத்தேசிய காங்கிரசை உருவாக்கியவரும் பின்னர் அதன் முதற் தலைவருமான சேர் பொன். அருணாசலம் அதனின்று 1923இல் வெளியேற வேண்டியதற்குக் காரணம், சிங்கள மக்களின் கெடுபிடியே எனலாம் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைக்காகப் போராடுவதற்காக ஒரு நிறுவனம் தேவை என்பதை சேர் பொன். அருணாசலம் உணர்ந்து 1924இல் அதனை தமிழ் லீக் என்ற பெயரில் உருவாக்கினாலும், அடுத்த

காக்க சமஷ்டி அமைப்புக் கோரி நின்றதை ஆதரிக்கத் தவறினர்.

கண்டியர் பின்வந்த டொனமோர், சோல்பெரி அரசியற் திட்டங்களின்முன்னர் சமஷ்டி முறையை வற்புறுத்தி அது ஏற்கப்படாத நிலையில் கரையோரச் சிங்களவரின் பௌத்த சிங்கள தேசிய வாதத்துடன் சங்கமமாயினர். தமிழ் மக்களோ டொனமோர், சோல்பெரி அரசியற் திட்டங்களில் கூடிய பிரதிநிதித்துவம் பெறுவதில் அதிக அக்கறை மட்டுமே காட்டினர். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் சமபலப் பிரதிநிதித்துவம் அல்லது 50 : 50 என்ற பிரதிநிதித்துவக் கோட்பாட்டையே சோல்பெரி குழுவினர் முன்வைத்தார். அதாவது சிங்கள மக்களுக்கு 50% பிரதிநிதித்துவமும், சிறுபான்மையினர் எல்லோருக்கும் 50% பிரதிநிதித்துவம் என்பதே இதன் பொருளாகும். சிறுபான்மையினரில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுவதால் போதிய செல்வாக்கை ஆட்சி உரிமையில் பெறலாம் என இவர் நம்பினார். எனினும் நடைமுறையில் சிக்கலுடைய அமைப்பே இது என்பதை உணர்ந்த சோல்பெரிக் குழுவினர், கண்டியர் கூறியது போன்ற ஒரு சமஷ்டி அமைப்பே தமிழ்ப் பிரதிநிதிகள் கேட்காத நிலையில் கொடுக்கவும் விரும்பவில்லை. காரணம் ஆங்கில நாடு ஒற்றை ஆட்சி அமைப்புடைய நாடு. அத்தகைய அமைப்பையே இலங்கையில் புகுத்தல் நலம் என அவர்கள் உணர்ந்ததோடு சோல்பெரி அரசியற் திட்டம் தயாரிக்கப்பட்டபோது டி. எஸ். சேனநாயகா போன்றோர் காட்டிய மதிநுட்பம் தமிழ்மக்கள் ஒரே அணியில் நின்று எதிர்க்கும் நிலைக்குப் பதிலாக பதவி ஆசையினால் கவரப்பட்டு அவரின் வலையில் சிக்கி அதனை ஏற்கவும் வைத்தது.

உண்மையானால் இது மிகப் பாரதூரமானது மட்டுமல்ல ஆபத்தானதுமாகும்.

குழுண காட்டுப் பகுதியிலும் ஸ்ரீலங்கா படையின் ஆதரவுடன் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் இயங்கி வருவதாகவும் மொறட்டுவையில் ஒரு வீட்டில் ஈ. என். டி. எல். எவ். உறுப்பினர் இருபத்தைந்து பேர் தங்கியிருப்பதாகவும் எம். பிக்களின் மெய்ப்பாதுகாவலர் என்ற போர்வையில் ''ரெலோ'' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் கொழும்பு நகரில் நடமாடுவதாகவும் இதே பத்திரிகைச்செய்தி தெரிவிக்கிறது.

சமூக விரோதக் கும்பல்களாக மாறிவிட்ட இவர்களின் நடவடிக்கைகள் நடமாட்டங்கள்பற்றி இலங்கையில் புலனாய்வுத்துறையினருக்குத் தெரியாதா; அல்லது தெரிந்தும் தெரியாதமாதிரி இருக்கிறார்களா?

ஸ்ரீலங்கா படையின் பாதுகாப்புடன் இவர்கள் தனிமுகாமில் வைக்கப்பட்டிருந்தால் அரசுக்குத் தெரியாமலிருக்க முடியாது?

அரசாங்கம்தான் இவர்களுக்குப் பாதுகாப்பளித்துப் புகலிடம் கொடுத்து வைத்திருக்கிறதென்றால் அதன் நோக்கம் என்ன?

ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ ஆகிய குழுக்கள் இந்தியப் படையின் பாதுகாப்புடன் வந்து அவர்களின் பாதுகாப்பில் தங்கியிருந்து அட்டகாசம் புரிந்து அவர்களின் பாதுகாப்புடன் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பேசும் மக்களைக் கொள்ளையடித்து, ஆட்களைக் கடத்திக் கொலை செய்து வெளியேறியவர்கள்.

தமது செயல்களினால் தமிழ் பேசும் மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டவர்கள்.

இவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் இலங்கை அரசு புகலிடம் அளித்து உண்டி கொடுத்து வீணாகச் செலவு செய்யமுடியாது.

ஏற்கனவே கொழும்பு மொறட்டுவைப் பகுதிகள் சட்டவிரோத ஆயுத நடவடிக்கைகளால் பெரும் பாதிப்புக்குள்ளான பகுதிகள்.

இந்தக் கும்பல்களையும் இப்பகுதிகளில் தொடர்ந்து வைத்திருப்பதால் மீண்டும் கொலை கொள்ளைகள் அதிகரிக்குமென்பதும் இதைக் கட்டுப்படுத்துவது பெரும் சிரமமாயிருக்குமென்பதும் அரசுக்குத் தெரியாமலிருக்க முடியாது.

இந்தக் குழுக்கள்மீது அரசுக்கு நம்பிக்கை இல்லை என்பதை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா சொல்லாமல் சொல்லியிருந்தார்.

ஆனாலும் ''எங்களையும் அழைத்துப் பேசுங்கள்'' என்று அடிக்கடி ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி. பிரேமச்சந்திரன் வற்புறுத்திக் கேட்டதைத் தொடர்ந்து இம் மாதம் பதினைந்தாம் தேதி சந்திக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா படையின் பாதுகாப்பில் ஈ. பி. ஆர். எல். எவ். நூறுபேர் கொழும்பிலிருப்பதும் இதர பகுதிகளில் இதர குழுவினர் ஆயுதங்களுடன் நடமாடுவதும் அனுமதிக்கப்படுவது ஏன்?

இந்திய ஹோவும் இந்தியப் படையினரும் செய்த அதே தவறை இலங்கைப் படையினரோ இலங்கை அரசோ செய்யத் துணியாது என்று நம்புகிறோம்.

ஹோவும் இந்தியப் படையும் காட்டிய தவறான வழியினால் இந்திய அரசும் தமிழ் நாடு அரசும் படும் தொல்லைகளைப் பார்த்தபின்னரும் இலங்கை அரசு அதே மடத்தனத்தைச் செய்யமாட்டாதென்றும் நம்புகிறோம்.

---

கலாசார ரீதியில் உள்ள தனித்துவம், பொருளாதார வளம் ஆகியவை இத்தகைய தகுதி படைத்த தமிழ் மக்களுக்காக அவர்கள் தன்மானத்துடன் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுய ஆட்சி ஒன்றை அமைக்க போராடுவதற்காகவே இலங்கைத் தமிழரசுக் கட்சிஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவும் சுட்டிக்காட்டினார். பின்னர் இக் கட்சியின் சின்னமாக வீடு தேர்ந்தெடுக்கப் பட்டதும், இதன் முதல் தேசிய மகாநாடு வட கிழக்கு மாகாணங்களின் நடுமையத்தில் அமைந்திருக்கும் திருகோணமலையில் 1951 இல் நடைபெற்றதும் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தில் கொண்டிருந்த அக்கறையிலே எனலாம். திருகோணமலை மகாநாடு திருகோணமலை தான் தமிழர் சுய ஆட்சி பெறும் போது தமிழ்ப் பகுதிகளின் தலைநகராக அமை

தில் அக்கறை கொண்டவர்களே ஒழிய, பிராந்திய ரீதியில் ஓர் அமைப்பின் மூலம் தமது நலன்களைப் பாதுகாப்பதில் அக்கறைகாட்டவில்லை தமிழ்மக்களின் இத்தகைய எதிர்பார்ப்புகள் தக்க பலனளிக்காது தோல்விகண்ட காலகட்டத்தில் தான் தமிழ் மக்களுக்காகப் போராடத் துணிந்த எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் இக்கருத்து வெளியாகியது காலங் கடந்த கருத்தாயினும் பின்வந்த சம்பவங்கள் இக்கருத்து ஒரு தீர்க தரிசனமான கருத்து என நிரூபித்தன எனலாம்.

தமிழ் மக்கள் தனியான தேசிய இனத்தவர்கள் என்பதனை பிரித்தானியர் தமது ஆட்சியின் தொடக்க காலத்திலே உணர்ந்து விட்டார்கள் என்பதனை அப்போதய பிரித்தானிய கவனரின் காரியதரிசியாக இருந்த கிளேகோஸ் 1799 இல் வெளியிட்ட குறிப்

பிரித்தானியர் ஆட்சியை ஆரம்பித்தபோது தமிழ், சிங்கள தேசிய இனங்களின் தனித்துவத்தை நன்குணர்ந்திருந்தனர் என்பதை முதன்முதலாக இந்நாட்டினை ஆட்சி செய்ய உருவாக்கப்பட்ட சட்ட நிரூபனசபையில் 1833 இல் ஒரு தமிழரைப் போன்று ஒரு சிங்களவரை மட்டுமே நியமித்திருந்தனர். 1889 இல் கண்டிச் சிங்களவருக்கும் ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டது. இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டில் தமிழர் தனித்துவமான கலாசாரத்தினை உடையவர்கள் என்றும் சிங்கள மக்களில் கரையோரத்தில் வாழ்பவர்களும் மலைநாட்டில் வாழ்பவர்களும் தனித்துவமான கலாசாரப் பண்புகளை உடையவர்கள் என்றும் அங்கீகரித்தமை புலனாகின்றது. இத்தனித்தன்மையை உணர்ந்துதான் கண்டியர் தேசிய சபை 1927 இல் மூன்று பிராந்தியங்களைக் கொண்ட அதில் தமிழருக்கென வடக்கு கிழக்கு மாகாணங்கள் கொண்ட அமைப்பை நாடி நின்றது.

உணர்ந்து 1924இல் அதனை தமிழ் லீக் என்ற பெயரில் உருவாக்கினாலும், அடுத்த ஆண்டில் அவரது திடீர் மரணம் தமிழ் லீக்கின் வாழ்வையும் அஸ்தமனமாக்கியது. 1920களில் தமிழ் மக்கள் தாம் புறக்கணிக்கப்படுகின்றனர் என உணரத் தொடங்கினர். காரணம் இக்காலம் வரை சிங்கள மக்களுடன் சமத்துவமான பிரதிநிதித்துவம் தமிழ் மக்கள் பெற்று வந்ததால் தாம் சிறுபான்மையினர் என்று உணரவில்லை. ஆனால் 1921 சட்டநிரூபண சபைக்கு பிரதேசவாரியாக நடைபெற்ற தேர்தலில் தாம் சிறுபான்மையினர் என உணர்ந்தனர். 23 பேர் கொண்ட சட்டநிரூபண சபையில் இவர்களின் எண்ணிக்கை நான்காக மட்டுந்தான் காணப்பட்டது. இதில் அதிருப்தி கொண்ட தமிழ் மக்கள் தமது பிரதிநிதித்துவத்தினைக் கூட்டி சட்ட சபையில் தமது செல்வாக்கினைப் பயன்படுத்த முனைந்தார்களே அன்றி, கண்டியர் 1927இல் தமது தனித்துவத்தினைப் பாது

பட்டு அவரின் வலையில் சிக்கி அதனை ஏற்கவும் வைத்தது.

(தொடரும்)

---

## ஏன் இந்தப் பாராமுகம்?

ஆசிரியர்,
ஈழநாதம்.

புன்னாலைக்கட்டுவன் - நீர்வேலி வீதி கடந்த பல வருடங்களாக எதுவித திருத்த வேலைகளும் செய்யப்படாமல் சீரழிந்த நிலையில் உள்ளது.

கடந்த கால அசம்பாவிதங்களின் போது யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள அநேக மக்களும் பல சிரமங்களின் மத்தியில் போக்குவரத்து செய்த வீதி இதுவேயென்பது நினைவூட்ட வேண்டியதாகும்.

இப்பகுதியில் வாழும் விவசாயிகளும் சிறுப்பிட்டி, புத்தூர் விவசாயிகளும் அன்றாடம் சுன்னாகம் சந்தைக்குப் போக்குவரத்து செய்யப் பாவிப்பது இந்த வீதியே யாகும். இப்பகுதியில் அன்றாடம் நூற்றுக்கணக்கான டிராக்டர்கள் கல்லேற்றிவரப் பாவிப்பதும் இந்த வீதியே தான்.

இத்தனை முக்கியத்துவம் மிக்க இந்த வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் கவனிப்பாரற்றுக் கிடப்பது இத்தனை பாவனையாளர்களும் அன்றாடம் பாடசாலை செல்லும் மாணவ, மாணவியருக்கும் மிகவும் கஷ்டத்தைத் தருகின்றது.

மழை நேரங்களில் இவ்வீதியில் உள்ள பாரிய கிடங்குகளில் மழைநீர் தேங்கிநின்று பாதசாரிகளையும் மற்றும் சைக்கிளில் செல்லுவோரையும் மிகவும் துன்புறுத்தி வருகின்றது. பாடசாலைக்கு வெளிக்கிட்ட மாணவர்கள் இந்த அழுக்கு நீரில் விழுந்து பாடசாலைப் பயணத்தை நிறுத்தியதுமுண்டு இதே போல் வேறு பிரயாணிகளும் தான்,

இந்த வீதியைத் திருத்தம் செய்து தரும்படி பெருந்தெருக்கள் திணைக்களம், வீதி அபிவிருத்திச்சபை என்பவற்றைப் பலமுறை கேட்டும், இன்றுவரை பலன் கிட்டாததையிட்டு மக்கள் மிகவும் வேதனையடைகின்றனர் இந்த அதிகாரிகளுக்கு இப் பாவனையாளர் மீது ஏனோ இவ்வளவு வெறுப்பு? இந்த வீதி மீது ஏனோ இந்தப் பாராமுகம்?

:பரராசசிங்கம்

நீர்வேலி வடக்கு'
நீர்வேலி.

## மக்கள் மடல்

இப்பகுதியில் வாழும் இரும்பு, மரவேலைத் தொழிற்சாலைகளுக்கும் பாவிக்கவேண்டிய பிரதான பாதை இதுவேயாகும். இன்னும் இப்பகுதி மக்கள், கன்னாகம் புகையிரத நிலையத்துக்குப் போக்குவரத்து செய்யப் பாவிப்பதும் இந்த வீதியேயாகும்.

---

## அவுஸ்திரேலியா வானொலி தமிழ் நிகழ்ச்சி ஒலிபரப்ப

(கொழும்புத்துறை)

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களின் நலன் கருதி அவுஸ்திரேலிய வானொலியில் வாரத்துக்கு ஒரு தடவை அரைமணிநேரம் தமிழ் நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள சிட்னி, மெல்போர்ன் ஆகிய மாநிலங்களில் சுமார் இருபதாயிரம் ஈழத் தமிழர்கள் வாழுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழத் தமிழ்க்கழகம் இலங்கைத் தமிழ்ச் செய்திகளை வாரந்தோறும் அரைமணித்தியாலம் ஒலிபரப்பி வருகின்றது.

இங்கு பத்துத் தமிழ்ச் சங்கங்கள் உள்ளன. இவை தமிழ்ப்பணி செய்து தமிழருக்கு மிக உறுதுணையாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டங்கள் நடாத்துகின்றனர்.

இங்கு வெள்ளிக்கிழமை தோறும் முருகன் பஜனை கூட்டுப்பிரார்த்தனைகள் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

சிட்னியில் மாதத்தமிழ் ஏடு ஒன்று வெளியிடப்பட்டு வருகின்றது. இந்த ஏட்டிற்குச் 'சிட்னித் தமிழ்க் குரல்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நாட்டிலும் சில ஆயிரம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் எனவும், அங்கேயும் சில தமிழ்ச் சங்கங்கள் உள்ளன என்றும், தலைநகர் ஆக்லாந்தில் இருந்து 'தமிழ் மலர்' என்னும் பேரில் காலாண்டு ஏடு வெளியிடப்பட்டு வருகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக வைத்திய கலாநிதி திரு. எம். இராசநாதன் கடமையாற்றுகின்றார். (24)

---

## ரூபவாஹினியில் இன்று

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவரின் ஏகலைவன் புதுமோடி நாடக நிகழ்ச்சி இன்று மாலை 7 மணிக்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படவுள்ளது.

இது 1983 இல் ஒளிபரப்பப் பட்டு மீண்டும் மறு ஒளிபரப்புச் செய்யப்படுகிறது.

---

## நல்லூர் பொது நூலகம் செயற்படுகின்றது

(சுதுமலை)

கடந்த கால வன்செயல்களினால் செயல் இழந்திருந்த கொக்குவில் நல்லூர் பொது நூலகங்கள் மீண்டும் செயல் படத்தொடங்கியுள்ளன.

இந்த நூலகங்களுக்கு பல பாதிப்புகள் இருந்தும் கூட பொது மக்கள் நலன் கருதி நல்லூர் பிரதேசசபை நிர்வாக அதிகாரி பதில் நூலக அலுவலர்களை நியமித்து எல்லா நாட்களும் இந்நூலகங்கள் தினசரி காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஏழு மணி வரை திறந்திருந்த வசதி செய்து உள்ளார்.

இரவல் கொடுக்கும் பகுதி வாசகர் பகுதி, புதினப் பத்திரிகைப்பகுதி ஆகிய எல்லா பிரிவுகளும் செயல் படத்தொடங்யுள்ளன. (16)

---

## கல்லாறு றோசாலயாவின் புதிய நிர்வாகம்

(கல்லாறு)

கடந்த பதினெட்டு வருடங்களாக சிறப்பாகச் சேவையாற்றிவரும் பெரியகல்லாறு ''றோசாலயா'' கலை கலாசார பொதுச்சேவை நிலையத்தில் பதினெட்டாவது வருடாந்த

பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாக தெரிவும்அண்மையில் நடைபெற்றது.

தலைவர்திரு தி.பாலசூரியா உபதலைவர் டாக்டர்எஸ்.கனகராசாவும் செயலாளர் திரு. எம், கருணைரெத்தினம் உப செயலாளர் திரு.கே.தட்சணாமூர்த்தியும் உப குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன ,(45)

ஈழநாதம்

## தேனீர்க்கடையில் சிறுவர்கள் திருட்டு

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் தேனீர்க் கடையொன்றை உடைத்து, சிகரட் பக்கற்றுக்களையும், பணத்தையும் களவாடிய நான்கு சிறுவர்கள் கையும்மெய்யுமாகப்பிடிபட்டனர்.

## யாழ். தபால் ஊழியர்கள் 'மாக்பெட்'கட்டடத்தில் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபால் கந்தோரில் ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் போதிய வசதிகள் இன்றி பெரும் அவதியுறுகின்றனர்.

தற்போது இந்த அலுவலகம் உள்ள ''மாக்பெட்'' கட்டடம் காற்றோட்ட வசதிகள் யன்னல் இன்றி காணப்படுவதால், சில சமயம் ஊழியர்கள் வியர்வை காரணமாகத் தமது சேர்ட்டுக்களைக் கழற்றிவிட்டே பணிபுரிய வேண்டியுள்ளது.

அதிகாலை மூன்று மணிக்கு வேலைகள் ஆரம்பிப்பதால், முதல் நாள் இரவு வந்து தங்கியிருக்கப் படுக்கை, தங்குமிட வசதிகள் இன்றியும் இந்த ஊழியர்கள் அவதிப்படுவதை தினமும் காணலாம்.

வேறு ஒரு நல்ல இடத்தில் இதனை செயற்பட வைக்கவும் வசதியாக இடம் கிடைக்கவில்லை என்றுதபாற் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்குத்தெரிவித்தார்.

தமது நிலைமை குறித்து தபால் அமைச்சு மற்றும் அதிகாரிகளுக்கு விபரமாகத் தெரிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ். பிரதம தபால் கந்தோர் கட்டடம் திருத்தப்படும் வரை நாம் இப்படிக் கஷ்டப்பட்டு பணியபுரிய வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

## கூட்டுறவு சங்க பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று எதிர் வரும் பதின்மூன்றாம் திகதி காலை ஒன்பது மணியளவில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு.ப. கனகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சங்க ஊழியர்களுக்கு ஒருமாத வேதனத்தை ஊக்குவிப்பாகவழங்குதல் புங்குடுதீவு வாழ் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு கிணறு ஒன்று அமைக்க சாட்டியில் காணி ஒன்று கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் பெறுதல் போன்ற விடயங்களுடன் வேறும் பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்படும்.(22)

# வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் குறுகிய தூரங்களுக்கு அதிக கட்டணம்

(கிளிநொச்சி)

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஏனைய பிராந்தியங்களிலுள்ள போக்குவரத்துச் சபைகளை விடப் பல மடங்கு கூடுதலான பஸ்கட்டணத்தை பிரயாணிகளிடமிருந்து அறவிடுகிறது.

இது சம்பந்தமாக மீளாய்வு செய்து பஸ் கட்டணத்தைக் குறைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை 2500க்கும் அதிகமான மக்களின் கை ஒப்பத்துடன் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் முன்னை நாள் தொழிற்சங்க தலைவரும் தொண்டமான் நகர் சிற்றூரவை உறுப்பினருமான திரு த. சண்முகராசா வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஏனைய மாவட்டங்களில் அறவிடப்படும் பஸ் கட்டணங்களை விட இங்கு 70 சத வீதம் கூடுதலாக அறவிடப்படுகிறது.

பல வழிகளாலும் கடந்த பல வருடங்களாகப் பாதிக்கப்பட்டு வந்த தமிழ்மக்களை இவ்வாறு பஸ் கட்டணத்தைக் கூட்டி அறவிடுவதன் மூலம் மேலும் மக்களைப் பாதிக்கச் செய்கிறது என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நீர்கொழும்புவரை சுமார் 25 மைல்களாகும். இதற்கு 4.50 சதம் கட்டணமாகும். யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை சுமார் 10மைல் இதற்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபை அறவிடுவது 4 50 சதமாகும்.

இருபத்தி ஐந்து மைல்களுக்கும் 4.50 சதம் பத்து மைலுக்கும் 4 50 சதம். இது போன்று கண்டி வீதியில் செல்லும் பஸ்களிலும் ஏனைய மாவட்டங்களில் அறவிடும் கட்டணங்களை விடப்பல மடங்கு கூடுதலாக அறவிடப்படுகிறது.

பழைய கட்டணங்களை மாற்றி நீதியான கட்டணத்தை அறவிட்டு தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையைக் குறைக்கும் வண்ணம் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடி பதினெட்டு மைல்களாகும். பருத்தித்துறை டிப்போ இதற்கான கட்டணமாக 4-75 சதம் அறவிடுகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மேதினப் பொதுக் கூட்டத்தில் வைத்து இம் மகஜரின் பிரதி ஒன்று தமிழ் மக்களின் சார்பில் விடுதலைப்புலிகளிடம் திரு. சண்முகராசா கையளித்து வடபிரதேச மக்களின் இக்குறையைத் தீர்த்து வைக்குமாறு வேண்டிக்கொண்டார்.

(94)

## உருத்திரபுரத்தில் நடைபெற்ற கலை, கலாசார விழா

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் சந்திரோதய விளையாட்டுக் கழக கலை கலாசார விழா உருத்திரபுரம் பற்றிமா பாடசாலையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் மேற்படி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி விளையாட்டுக் கழகத்தைப் பாராட்டிப் பேசினார்.

விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பகுதியின் நாடகங்களும் கிளிநொச்சிமாவட்ட சர்வோதய இயக்க கலை கலாசாரப் பகுதியின் இசை, நடன நிகழ்ச்சிகளும், செல்வா நகர் சிற்றூரவையின் வில்லிசை நிகழ்ச்சியும், சந்திரோதய விளையாட்டுக் கழகத்தின் பட்டிமன்றம், கவியரங்கு உட்பட மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

சர்வோதய இயக்க கலை கலாசாரப் பிரிவின் மாணவியான செல்வி. ரி. ஷங்கீதா

# கல்முனையில் மினி சூறாவளி; கராஜ் கூரை ஓடுகள் பறந்தன

(கல்முனை)

கல்முனை நகருக்கருகாமையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் வீசிய மினி சூறாவளியினால் கராஜ் ஒன்றின் கூரை தூக்கி வீசப்பட்டது. வீடுகளின் ஓடுகளும் வீசப்பட்டன. தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சிக்கென அமைக்கப்பட்ட மேடையின் கூரையும் தூக்கி வீசப்பட்டது. கூரையை மீளவும் அமைத்தபிறகு தேனிசை நிகழ்ச்சி மாமுல் படி நடந்தேறியது,

மினி சூறாவளியினால் தென்னை மரங்களும் சாய்ந்தன. கடந்த மூன்று தினங்களாக இலேசான மழைத் தூற்றல். காலநிலை மப்பும் மந்தாரமுமாகவுள்ளது,

இதேவேளை அம்பாறை இக்கினியாக்கலையில் நேற்று முன்தினம் பெய்த பெரு மழை காரணமாக பள்ளக் காணிகள், வயற்பிரதேசங்கள் நீரில் மூழ்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

(48)

# சனசமூக நிலையங்களுக்கு 16,800 ரூபா நன்கொடை

(சுதுமலை)

நல்லூர் பிரதேசத்தை சார்ந்த 12 சனசமூக நிலையங்களுக்கும் கொக்குவில் பிரிவைச் சேர்ந்த 22 சனசமூக

யான சமூகப்பணிகளில் ஈடுபடுத்திய தகுதிவாய்ந்த சனசமூக நிலையங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன்களில்

## நானாட்டானில் மே தினம்

(நானாட்டான்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் ஆதரவுடன் நானாட்டானின் வைமன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மாபெரும் மேதின விழாவை கொண்டாடியது.

மேற்படி விழாவிற்கு பிர

## நெருக்கடியான காலகட்டத்திலும் தேனிசைச்செல்லப்பாவின் பாடலை இரசித்தோம்

-கருணா-

(அம்பாறை)

தமிழீழப் போராட்டத்தில்

தியில் இல்லை. இந்தியப்படையுடனான மோதலில் அவர்

வடை செய்யும் போதும் இந்தப் பாடல்களை மிக விரும்

வைச் சேர்ந்த 22 சனசமூக நிலையங்களுக்குமான அரசாங்கத்தினால் வழங்கப்படும் நன்கொடையாக சுமார் 16,800 ரூபா யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டுக்கான இந் நன்கொடைப்பணம் உண்மை

பொதுமக்களின் நலன்களில் நேர்மையுடன் செயல்படும் இப்படியான பொது நிறுவனங்களுக்கு மேலும் உதவி வழங்க தாம் தயாராக இருப்பதாக இத்துறை சார்ந்த உயர் அதிகாரி ஒருவர் 'ஈழநாதத்திற்கு' தெரிவித்தார். (19)

விழாவை கொண்டாடியது.

மேற்படி விழாவிற்கு பிரதம விருந்தினராக நானாட்டான் உதவி ஆணையாளர் திரு. சிவலிங்கமும் சிறப்பு விருந்தினராக நானாட்டான் பங்குத்தந்தை வண. பிதா. ஸ்ரனி அந்தோனியும் கலந்து கொண்டனர்.

வியான செல்வி. ரி. ஷங்கீதா தனது நாலாவது வயதில் மேடைக் கூச்சமின்றி மேடையில் ஏறி சிறந்ததொரு இசைக் கச்சேரியை நிகழ்த்தியதைப் பலரும் பாராட்டிப் பேசினர்

### நீதிமன்றங்களின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் வழக்காளிகள் நன்மையடைவதுடன் சிறைச்சாலைகளில் உள்ள இடநெருக்கடிகளும் குறைந்துவிடும் என நீதியமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நீதிமன்ற விசாரணைகளில் வாய்மூல சாட்சியத்தைக் குறைத்தல், எழுத்து மூலமான சாட்சியத்தைக் ஏற்கச் செய்தல், சாட்சியம் நீதிமன்றம் வராவிடில் வழக்கு விசாரணைகள் ஒத்திவைகப்படுவதைத் தடுத்தல் என்பன இதன் மூலம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# ஆடுகள் வளர்ப்பதற்கு ஊக்குவிப்பு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்போர்களுக்கு விநியோகம் செய்வதற்கான கிரிமுட்டி பண்ணையில் 54 நல்லின ஆடுகள் இனப்பெருக்கத்திற்காக சினைப்படுத்த வளர்க்கப்படுகின்றன.

இத் தகவலை கால் நடை உற்பத்தி சுகாதார பிரதிப் பணிப்பாளர் எஸ். அருளையா தெரிவித்தார்.

நல்லின ஆட்டுக்குட்டிகள் விநியோகம் செய்வதற்காக இந்தியாவிலிருந்து இவ் ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (37)

### இன்று

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு கரையோரத்தில் கடல் கொந்தளிப்பு ஏற்படும் என விடுதலைப்புலிகள் மீனவரை எச்சரித்து கடலுக்கு செல்லவேண்டாம் எனத்தடுத்துள்ளனர்.

### வராத்துப்பளை

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

கூச் செல்லும் முக்கிய வீதி நீண்டகாலமாகத் திருத்திப் புனரமைக்கப்படாமல் இருப்பதனால் பல்வேறு வகையான பிரச்சினைகள் ஏற்படுவதாக மக்கள் புகார் செய்துள்ளனர்,

இதனையடுத்து இவ்வீதியைத் திருத்தி புனரமைப்புச் செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் வழங்குமாறு வராத்துப்பளை சனசமூக நிலையம் வீதிகள் அபிவிருத்திச் சபைத் தலைவர், வடக்கு, கிழக்கு மாகாண சபை நெடுஞ்சாலைகள் திணைக்கள பதில்பணிப்பாளர், வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள யாழ். பொறியியலாளர், வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள பருத்தித்துறை அலுவலக பொறியியலாளர் ஆகியோரை அவசரமாகக் கேட்டுள்ளது. (25)

### உரிமை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

நடாத்தப் பல்கலைக்கழக உபவேந்தர் அனுமதி தர மறுத்ததாக பேராதனைப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உள்ள தேநீர்ச் சாலையில் தின் பண்டங்களின் விலை, தரம் ஆகியவைகள் பற்றி மாணவர் ஆட்சேபம் தெரிவித்த சமயம் உபவேந்தர் மாற்று நடவடிக்கையாகத் தேநீர்ச்சாலையைப் பூட்டி விட்டாராம்.

இதேவேளை 40 பல்கலைக் கழக மாணவர்கள் விரிவுரைகளுக்கு வராமல் இருப்பதாகப் பேராதனைப் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர் பல்கலைக்கழக மாணவர் சம்மேளன உறுப்பினர் 20 பேர் விரிவுரைகளுக்குச் சமுகம் கொடுப்பதாக இதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

250 பல்கலைக்கழக மாணவர் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 326 பேரைக் காணவில்லையாம். சென்ற ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து 75 பல்கலைக்கழக மாணவர் பெற்றோர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள் என்று பல்கலைக்கழக மான்யக்குழு தெரிவிக்கின்றது.

### தமிழ் நாட்டுக்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

முதலமைச்சர் மேலும் கூறினார்.

இலங்கைக் கடல் எல்லையைத் தாண்டி தமிழக மீனவர்கள் செல்லாது இருப்பதற்கு மத்திய அரசின் உதவியை தாம் கோரவிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார்.

### மட்டக்களப்பு

1 ஆம் பக்கத்தொடர்ச்சி

நாதன் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

சிறுகைத்தொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி போன்ற துறைகளில் ஒருங்கிணைந்த திட்டத்தை முன்வைக்கும் சங்கங்களுக்கு இந்த நிதி வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மைக்கால நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இந்த சுயவேலை வாய்ப்பை ஊக்குவிக்கவே நொறாட் நிறுவனம் நிதியுதவி அளிக்க முன் வந்துள்ளது.

### புலி இலச்சனை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள்முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தேனிசைச் செல்லப்பா குழுவினருக்கு தனித்தனியாகப் பொன்னாடைபோர்த்தி கௌரவித்தார். (48)

### தனியார்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை ஐந்து லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து ஐநூறு.

கூட்டுத்தாபனங்களின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஏழுலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து எழுநூறு ஆகும்.

ஆசிரியர்கள், தாதிமார்கள் குடும்ப சுகாதார தொண்டர்கள், சுகாதார சேவை ஊழியர்கள் உட்பட முப்பத்தையாயரம் பேர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

### பருத்தித்துறைக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நகர புதிய நிர்மாணத் திட்டத்தின் கீழ் இப்பொதுசன நூலக நிர்மாணத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்பகுதிக்கான பொது சன நூலகத்தின் முக்கியத்துவம் பற்றி இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியதையடுத்தே இவ் நவீன வசதிகளைக் கொண்ட நூலகம் அமைக்கப்படவுள்ளது. (85)

### தென்னாசியாவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவனமும் செலுத்தி உழைகக் வேண்டும் என்றார்.

மேலும் இதே கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம் பகுதி அரசியல் இணைப்பாளர் திரு ஆஞ்சநேயர் பேசும்போது,

தமிழீழம் எதிர்காலத்தில் ஆரோக்கியமான ஒரு பொருளாதார வளத்தைக் கொண்டிருக்க வேண்டுமானால் எமது மக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமானது இதன் மூலமே நாம் ஒரு தன்னிறைவு கொண்ட நாட்டை உருவாக்க முடியும் என்றார்.

மேலும் இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்சள் முன்னணி உறுப்பினர் திரு. செல்வநாயகம் தமிழீழ ஆய்வு நிறுவன அங்கத்தவர் திரு. கிங்ஸ்லி உட்பட பல தொழிற் ஸ்தாபனங்களையும் சேர்ந்தவர்கள் உரையாற்றினர் இறுதியாக நல்லூர் பிராந்தியப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன் அவர்களின் நன்றியுரையுடன் இக்கூட்டம் நிறைவு பெற்றது. (லோ)

(அம்பாறை)

தமிழீழப் போராட்டத்தில் நாங்கள் பல இன்னல்களைச் சந்தித்திருக்கிறோம். அந்த வேளையிலும் செல்லப்பாஅவர்களின் பாடல்களை இரசித்தோம். ஆனால் அன்று எம்முடன் சேர்ந்து இரசித்த போராளிகளில் சிலர் எம் மத்தியில் இல்லை. இந்தியப்படையுடனான மோதலில் அவர்கள் வீரமரணம் அடைந்துவிட்டார்கள் என தமிழீழவிடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி மட்டக்களப்பு பிராந்தியப் பொறுப்பாளர் கருணா நேற்று முன்தினம் இரவு கல்முனையிலுள்ள வெஸ்லிமை தானத்தில் நடைபெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்

இவ் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் கரிகாலன் பேசுகையில்–

இந்தியாவில் இருந்துகொண்டு எமது தமிழீழ மக்களை தட்டி எழுப்ப உணர்ச்சிமிக்க பாடல்களை 1979ஆம் ஆண்டு ஒலிப்பதிவு நாடாவில் பதித்துத்தந்த பெருமை தேனிசைச் செல்லப்பாவையே சாரும் எனத் தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில் சில காலங்களில் அவரது பாடல்களைமறைத்துவைத்து கேட்டு இரசித்தோம் இந்திய படைகள் இங்கு வந்து எமது போராளிகளையும் மக்களையும் கைது செய்த வேளையிலும் அந்தக் கூலிப்படைகளின் அட்டூழியங்களை பாடலாகப் பாடியவர் தேனிசைச் செல்லப்பா அவர்கள் என்றும் கூறினார்,

யாழ். மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அணி கலாசாரப் பொறுப்பாளர் சீதா பேசுகையில், தேனிசைச் செல்லப்பா ஐயா அவர்களின் பாடல்கள் மக்களின் உணர்வைப் போராளிகளுக்கும், போராளிகளின் உணர்வை மக்களுக்கும் புரிந்துகொள்ள வைத்தவர் ஐயா அவர்கள். எமது தமிழீழ மண்ணில் வாழும் மீனவர்கள் மீன் பிடிக்கும்போதும் விவசாயிகள் வயலில் அறுவடை செய்யும் போதும் இந்தப் பாடல்களை மிக விரும்பிக் கேட்டே வருகிறார்கள். இந்த வகையான பாடல்களைக் கேட்பதற்கும், கண்டுகளிப்பதற்கும் இவ்வளவு சூழ்நிலையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தித் தந்தவர்கள் விடுதலைப் புலிகளே என்று கூறினார்.

அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் காஷ்ரோ பேசுகையில், திரு. செல்லப்பாவின் எழுச்சிக் கீதங்கள் எமது போராட்டத்தை ஒருபடி உயர்த்தியுள்ளது. அவரது உணர்ச்சிகளை நாம் மதிக்கின்றோம். இந்திய இராணுவத்தினரின் அட்டூழியங்களை மிக இனிமையாக, இரசிக்சக் கூடிய விதத்தில்பாடிஎங்களை உற்சாகப்படுத்திவருகின்றார். அவர் திரு, செல்லப்பா அவர்களுக்கும் அவரது குழுவினர்சளுக்கும் நன்றி கூறினார்,

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பிரிவு பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களும் உரையாற்றினார்.

### மலையக

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைபற்றி இலங்கை, இந்தியா, மலையகத் தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கையில் இருந்து திருப்பி அனுப்பப் படவுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்சினை பற்றியும் அவர்களை தமிழ்நாட்டில் குடியமர்த்துவதில் உள்ள சாதக பாதக நிலைகள் குறித்தும் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இலங்கையின் மலையகத்தில் உள்ள இந்திய பாஸ்போட் பெற்ற இந்திய வம்சாவழியினரைத் திருப்பி அழைக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவில்லை என அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா அண்மையில் தெரிவித்தது குறித்து, செய்தியாளர் முதலமைச்சரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

1983 இற்குப் பிறகு ஏற்பட்ட இனக்கலவரங்களையடுத்து இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் சென்றதையடுத்து, இந்தத் தோட்டத் தொழிலாளர்களை ஏற்பதில் இந்தியா பின்வாங்கியது.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்ப இலங்கை வழிவகுத்தாலே இந்தியா, தோட்டத் தொழிலாளர்களை ஏற்கும் என முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி இலங்கை அரசுக்கு அன்று அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது. அதேவேளை இந்தியாவில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றி ரஞ்சன் விஜேரெட்னா கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையிலிருந்து நாம் அகதிகளை இந்தியாவுக்கு அனுப்பவில்லை. இந்தியா அவர்களை ஏற்றுக் கொண்டது. அவர்களைத் திருப்பி அனுப்பவேண்டியதும் இந்தியாவின் கடமை என்பதே.

## நன்கொடை

(வவுனியா)

சனசமூக நிலையங்களுக்கு, 89, ஆம் ஆண்டுக்கான நன்கொடைப் பணம் வழங்கும் வேலைகள் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களுக்கும் தலா 500 ரூபா வழங்கப்படுகிறது. (தி)

### நடமாடும்

(1ஆம் பக்க தொடர்ச்சி

மேற்படி திணைக்களங்களுக்கு அழைப்பு இல்லாத நிலையில்தான் கலந்துகொள்ளவில்லை என தெரியவருகிறது. (37)

## மரண அறிவித்தல்

### அப்பாப்பிள்ளை தியாகராசா

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை தியாகராசா (வ.பி.போ.ச. சாலை அதிபர் கிளிநொச்சி) அவர்கள் 06.05.1990 ல் அகால மரணமானார். ஈமக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் வெளியிடப்படும்.

தகவல் : ஊழியர் நலன்புரிச்சங்கம்
வ.பி.போ.ச. கிளிநொச்சிச்சாலை

(R-460)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.